

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 147 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 21 – சனிக்கிழமை 06 ஜனவரி 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 147 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 21 - Saturday 06 January 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## பேரிடர் நிவாரண நிதி : தமிழ்நாட்டைச் சேர்ந்த

# அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் அமைச்சர் அமித்ஷாவை சந்திக்க முடிவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (04.01.2024) பிரதமர் நரேந்திர மோடி அவர்களை அவரது இல்லத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து உரையாடினார். அப்போது தமிழ்நாட்டில் ஜனவரி 19 முதல் 31ஆம் தேதி வரை நடைபெறவுள்ள 'கேலோ இந்தியா' இளைஞர் விளையாட்டு போட்டி 2023 க்கான துவக்க விழாவுக்கு அழைப்பு விடுத்தும், தமிழ்நாட்டின் வெள்ள நிவாரண நிதியை உடனடியாக வழங்கக் கோரியும் வலியுறுத்தினார்.

**சென்னை, ஜன. 6 -**

**தமிழ்நாடு அரசு கோரியுள்ள வெள்ள நிவாரணத் தொகையை உடனடியாக ஒதுக்கீடு செய்ய வலியுறுத்திட அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்திக்க நேரம் கோரியுள்ளனர் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



தமிழ்நாட்டில் கடந்த டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் "மிக்ஜாம் புயலினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பெருமழை ஏற்பட்டு, அதன் காரணமாக கடுமையான பாதிப்புகளும், பொதுமக்களுக்கு வாழ்வாதார பாதிப்புகளும் ஏற்பட்டன.

அதேபோன்று, டிசம்பர் 17 மற்றும் 18 ஆம் தேதிகளில் ஏற்பட்ட வரலாறு காணாத அதிக மழைப் பொழிவின் காரணமாக, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகக் கடுமையான வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டன.

தமிழ்நாட்டில் கடந்த டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த இந்த இரண்டு மிகப் பெரிய இயற்கைப் பேரிடர்களுக்கும் ஒன்றிய அரசிடமிருந்து நிவாரணத் தொகையாக தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 37,907.19 கோடி ஏற்கெனவே கோரியுள்ளது.

**உரிய நிதி வழங்குவதாக ராஜ்நாத்சிங் உறுதியளித்தார்!**

இது சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கான மறுகட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 19,692.67 கோடி ரூபாயும், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளுக்கான மறுகட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 18,214.52 கோடி ரூபாயும் உள்ளடக்கியதாகும்.

மிக்ஜாம் புயலினால் சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் ஏற்பட்ட

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

## புதுடெல்லியில்

# பிரதமர் மோடியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்தார்!

## "கேலோ இந்தியா" தொடக்க விழாவில் பங்கேற்க அழைப்பு!

**புதுடெல்லி, ஜன.6–**

**டெல்லியில் பிரதமர் நரேந்திரமோடி அவர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) மாலை சந்தித்து 'கேலோ இந்தியா' போட்டிக்கான அழைப்பிதழை வழங்கினார்.**

'கேலோ இந்தியா' விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த ஒன்றிய அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நான்கு நகரங்களில் 'கேலோ இந்தியா' போட்டிகள் நடைபெற உள்ளது. வருகிற 19–ஆம் தேதி தொடங்கும் 'கேலோ இந்தியா' போட்டிகள் 31–ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**பிரதமரின் இல்லத்தில் சந்திப்பு!**

இந்நிலையில் பிரதமர் மோடி அவர்களை டெல்லி சென்ற தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சந்தித்தார். பிரதமர் மோடியின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

அப்போது 'கேலோ இந்தியா' போட்டிக்கான அழைப்பிதழை பிரதமர் மோடி அவர்களிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

**பேரிடர் நிவாரண நிதியை வழங்கக் கோரிக்கை!**

'கேலோ இந்தியா' போட்டியின் தொடக்க விழாவில் பங்கேற்குமாறு பிரதமர் மோடி அவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

புதுடெல்லியில் பிரதமருடனான சந்திப்பு குறித்தும் கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023 குறித்தும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது 'எக்ஸ்' சமூக வலைதளப் பக்கத்தில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 19, 2024 அன்று சென்னையில் நடைபெறவுள்ள கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழாவிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை அழைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**தேவையான நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதி!**

புதுடெல்லியில் முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் விரிவான நிவாரணம், மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள தேசிய பேரிடர் நிவாரண நிதியை உடனடியாக வழங்குமாறு பிரதமரிடம் தமிழ்நாடு அரசின் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளேன்.

தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக பிரதமர் உறுதியளித்தார்.

மேலும், தமிழ்நாட்டின் பொது முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விஷயங்கள் குறித்தும், குறிப்பாக தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையின் பன்முக வளர்ச்சி குறித்து பிரதமருடன் கலந்துரையாடினேன்.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (04.01.2024) பிரதமர் நரேந்திர மோடி அவர்களை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் ஜனவரி 19 முதல் 31ஆம் தேதி வரை நடைபெறவுள்ள "கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டி –2023"க்கான துவக்க விழா அழைப்பிதழை வழங்கினார்.

இந்தச் சந்திப்பின்போது, 2023–ஆம் ஆண்டுக்கான சி.எம். கேடயம் விளையாட்டு மற்றும் தமிழ்நாடு நடத்திய ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப்பை வெற்றிகரமாக நடத்தியதைக் காட்டும் (காபி டேபிள்) புத்தகத்தையும் பிரதமரிடம் வழங்கினேன்.

கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023, விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டின் பெருமைமிக்க அமைப்பு திறன் மற்றும் புகழ்பெற்ற வரலாற்றை நிரூபிக்க மற்றொரு நம்பிக்கைக்குரிய வாய்ப்பாக இருக்கும்.

இவ்வாறு தனது சமூக வலைதளப் பக்கத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**ராகுல் காந்தியுடன் சந்திப்பு!**

டெல்லியில் பிரதமர் மோடி அவர்களைச் சந்தித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பின்னர் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி அவர்களையும் சந்தித்துப் பேசினார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 06-01-2024

# மீண்டும் மணிப்பூர்

2023ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி அன்று தொடங்கியது, மணிப்பூர் மாநிலத்தில் வன்முறை. சில மாதங்களுக்கு முன்னால் லேசாக அடங்கி இருந்தது. இதோ 2024 ஆம் ஆண்டும் தொடங்கிவிட்டது.

கடந்த டிசம்பர் 25ஆம் தேதி காலையில் மணிப்பூர் மாநிலத்தில் குக்கி இன மக்கள் அதிகம் வாழும் காங்போக்பி மாவட்டத்தில் ஜூபி எனும் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடந்தது. இந்த துப்பாக்கிச் சூட்டில் 21 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். புத்தாண்டு தினமான ஜனவரி 1ஆம் தேதியன்றும் துப்பாக்கிச் சூடு தொடர்ந்துள்ளது. இதில் 3 பேர் கொல்லப்பட்டார்கள். ஐந்து பேர் காயம் அடைந்துள்ளனர். தௌபால், இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு, காக்சிங், பிஷ்னுபூர் ஆகிய மாவட்டங்களில் மீண்டும் ஊரடங்கு போடப்பட்டுள்ளது.

**எட்டு மாதங்களாக எரிகிறது மணிப்பூர். 2024 ஆம் ஆண்டும் தொடங்கிவிட்டது என்பதுதான் வேதனைக்குரியது ஆகும். எட்டு மாதங்களில் ஒரே ஒரு நாள்கூட பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், மணிப்பூர் செல்லவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் சொல்லவில்லை. அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி 180 பேர் இறந்துள்ளார்கள். எவரொருவர் வீட்டுக்கும் பிரதமர் செல்லவில்லை. உள்துறை அமைச்சர் அமித்ஷா மூன்றே மூன்று நாட்கள்தான் இருந்தார். ஒப்புக்கு! கணக்குக் காட்ட மட்டும்!**

**மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனத்தை இது வெளிப்படுத்துகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தையும், மெத்தனத்தையும் இது வெளிப்படுத்துகிறது. பிரதமர் மோடி - உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரது திறமையின்மையின் சாட்சியாக இருக்கிறது மணிப்பூர். அந்த மாநிலத்தின் முதலமைச்சரான பிரேன்சிங்கைக் கூட அவர்களால் மாற்ற முடியவில்லை. பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களே, பா.ஜ.க. தலைமைக்கு எதிராகக் கருத்துச் சொன்ன பிறகும், அதனை பா.ஜ.க. தலைமையால் செய்ய முடியவில்லை.**

அதிகமான நாட்கள் இணையத் தடைகள் விதித்த மாநிலமாக காஷ்மீருக்கு அடுத்தபடியாக மணிப்பூர் மாறியது. இதனால் அப்பகுதியில் நடக்கும் பல வன்முறைகள் மற்றும் பெண்கள் மீதான வன்கொடுமைகள் வெளியே வராமல் மறைக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் உடல்களை வாங்க, உரிமைகோர ஆட்கள் வரவில்லை. இதுதான் துயரங்களிலும் துயரம் ஆகும். வன்முறையில் இறந்த 96 பேரின் உடல்கள் இம்பாலில் உள்ள மாநில மருத்துவக் கல்லூரி, ஜவஹர்லால் நேரு மருத்துவக் கல்லூரி மற்றும் சுராசந்த்பூரில் உள்ள மருத்துவமனையில் அப்படியே இருக்கின்றன. இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உடல்களை அடையாளம் காண மருத்துவமனை சவக்கிடங்கிற்குச் சென்று நேரில் பார்வையிட வேண்டும். ஆனால் இப்போது மக்கள் அங்கு செல்ல முடியாததால் இந்த உடல்கள் பல மாதங்களாக அடையாளம் காணப்படாமல் இருக்கின்றன.

இரண்டு பெண்கள் நிர்வாணமாக அழைத்துச் செல்லப்பட்டார்களே! அவர்கள் என்ன ஆனார்கள்? என்பதை சமீபத்தில் பி.பி.சி. செய்தி நிறுவனம் கட்டுரையாக்கி வெளியிட்டு இருந்தது. “நான் முன்பு வாழ்ந்ததைப் போல என்னால் மீண்டும் வாழ முடியும் என்று நான் நினைக்கவில்லை. வீட்டை விட்டு வெளியேறுவது எனக்கு கடினமாக உள்ளது, மக்களைச் சந்திப்பதற்கு பயமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. கூட்டத்தைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது. இனி எந்தப் பெண்ணுக்கும் இப்படி நடக்கக் கூடாது” என்று அந்தப் பெண்கள் சொல்லி இருக்கிறார்கள். இதில் ஒருவர் கல்லூரி மாணவி. இனி கல்லூரிக்கும் செல்ல முடியாது, அனைவரிடமும் பேச முடியாது என்று சொல்லி இருக்கிறார். அதாவது அந்த இரண்டு பெண்களைக்கூட மன அளவில் பா.ஜ.க. அரசுகளால் மீட்க முடியவில்லை.

மே மாதம் அவர்கள் நிர்வாணம் ஆக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களை அப்படி அழைத்துச் செல்வதை காவலர்களே கைகட்டி வேடிக்கை பார்த்தார்கள். அந்தப் பெண்கள் இரண்டு வாரத்தில் புகார் கொடுத்தார்கள். மே, சூன், சூலை வரை எந்த நடவடிக்கையும் இல்லை. சூலையில் நிர்வாணமாக அழைத்துச் செல்லும் காட்சி வீடியோக்கள் வெளியானது. அதன் பிறகுதான் மணிப்பூரைத் தாண்டி வெளியில் தெரிந்தது. முதன்முதலாக மூன்று மாதம் கழித்து பிரதமர் நரேந்திரமோடி, மணிப்பூர் பற்றி வாய்திறந்து கருத்துச் சொன்னார்.

இரண்டுவழக்குகளைப்பதிவுசெய்துள்ளது சி.பி.ஐ. இருகுற்றப்பத்திரிக்கைகளை கவுஹாத்தி சி.பி.ஐ., சிறப்பு குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த செப்டம்பர் தாக்கல் செய்தது சி.பி.ஐ. அவ்வளவுதான்!

கடந்த நவம்பர் மாதம்தான் 9 மைத்தி இனக்குழு அமைப்புகளுக்கு ஆளும் பா.ஜ.க. அரசு 5 ஆண்டுகளுக்குத் தடை விதித்தது. மக்கள் விடுதலை ராணுவம் (PLA), புரட்சிகர மக்கள் முன்னணி (RPF), ஐக்கிய விடுதலை முன்னணி (UNLF), மணிப்பூர் மக்கள் ராணுவம் (MPA), காங்லீய்பக் மக்கள் புரட்சிகர கட்சி (PREPAK), காங்லீய்பக் கம்யூனிஸ்ட் கட்சி (KCP), கே.ஒய்.கே.எல்., கோர்கோம், ஏ.எஸ்.யூ.கே - ஆகிய 9 அமைப்புகளை ஒன்றிய அரசு தடை செய்தது.

இவர்கள் இன்னமும் மணிப்பூர் பிரச்சினையின் உண்மையான காரணத்தைச் சொல்ல விரும்பவில்லை. ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், வழக்கம் போல் இது அன்னியச் சதி என்ற பல்லவியைப் பாடுகிறார். “மணிப்பூர் ஒரு எல்லைப்புற மாநிலம். மணிப்பூர் வன்முறையில் எல்லை தாண்டிய தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கின்றனர்” என்று சொல்லி இருக்கிறார். எல்லாவற்றுக்கும், வெளிப்புறச் சதிதான் இவர்களுக்குத் தெரிந்த ஒரே காரணம்.

மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க. அடைந்த தோல்வியை, மணிப்பூர் மாநில வன்முறைக்குக் கிடைத்த தண்டனையாகவே பார்க்க வேண்டும். அந்த மாநிலத்தில் ஆளும் கட்சியாக இருந்தது மிசோ தேசிய முன்னணி. பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சி இது. பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து பிரச்சார மேடையில் ஏற மாட்டேன் என்று முதலமைச்சர் ஜோரம் தங்கா சொன்னார். இந்நிலையில் மொத்தமுள்ள 40 இடங்களில் பா.ஜ.க. 23 இடங்களில் மட்டும் போட்டியிட்டது. தேர்தல் முடிவுகளின் படி ஆளும் மிசோ தேசிய முன்னணி 40 இடங்களில் 10 இடங்களில் மட்டுமே வென்றது. 23 இடத்தில் போட்டியிட்ட பா.ஜ.க. 2 இடங்களில் மட்டுமே வென்றது. ஜோரம் மக்கள் இயக்கம் என்ற கட்சி 27 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது. மணிப்பூர் பிரச்சினையை சரியாகக் கையாளாததால் பா.ஜ.க. இங்கு தோல்வியைத் தழுவியது. பா.ஜ.க.வுடன் தேர்தலுக்கு முன்பு வரை இருந்த மிசோ தேசிய முன்னணி ஆளும் தகுதியை இழந்தது.

**தகுதியற்றவர்களால் ஆளப்பட்டால் மக்கள் உடலும் மனமும் எரிந்து கொண்டே இருக்கத்தான் வேண்டும் என்பதற்கு மணிப்பூர் சாட்சியாக அமைந்திருக்கிறது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை, கிண்டி மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் நாளை (6.1.2024) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் நடத்தும் “கலைஞர் 100” திரைத்துறையின் மாபெரும் கலைவிழாவிற்கான அழைப்பிதழை தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் முரளி ராமசாமி வழங்கினார். உடன் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர் பூச்சி எஸ். முருகன், FEFSI தலைவர் ஆர்.கே. செல்வமணி, தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தின் செயலாளர்கள் ஆர். ராதாகிருஷ்ணன், கதிரேசன், திரைப்பட இயக்குநர் லிங்குசாமி ஆகியோர் உள்ளனர்.

### ஆந்திர முதல்வர் ஜெகன் மோகனின் தங்கை

## ஒய்.எஸ்.சர்மிளா காங்கிரஸில் இணைந்தார்!

புதுடெல்லி, ஜன. 6 -

ஒய்.எஸ்.ஆர். தெலுங்கானா கட்சியின் தலைவர் ஒய்.எஸ். சர்மிளா, மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி ஆகியோர் முன்னிலையில் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

ஆந்திர முதலமைச்சரும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் தலைவருமான ஜெகன் மோகன் ரெட்டியின் சகோதரி சர்மிளா, தெலுங்கானாவில் ஒய்.எஸ்.ஆர் தெலுங்கானா என்ற பெயரில் கட்சி நடத்தி வந்தார். அண்மையில் தெலுங்கானாவிற்கு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு சர்மிளா ஆதரவளித்ததுடன் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரமும் மேற்கொண்டார். இந்நிலையில் டெல்லி காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி ஆகியோர் முன்னிலையில் ஒய்.எஸ். சர்மிளா காங்கிரசில் இணைந்தார். ஒய்.எஸ்.ஆர் தெலுங்கானா கட்சியையும் காங்கிரஸ் கட்சியுடன் இணைப்பதாக சர்மிளா அறிவித்தார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஒய்.எஸ்.சர்மிளா, நாட்டிலேயே மிகப்பெரிய மதச்சார்பற்ற கட்சியாக காங்கிரஸ் விளங்குவதாக தெரிவித்தார். நாட்டின் பிரதமராக ராகுல் காந்தியை காண வேண்டும் என்பது தனது தந்தை ராஜசேகர ரெட்டியின் கனவு என்றும், அதை செயல்படுத்தும் பணியில் தாமும் பங்கு வகிக்க போவது மகிழ்ச்சியளிக்கிறது என்றும் ஒய்.எஸ். ஷர்மிளா தெரிவித்தார்.



புதுடெல்லியில் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல்காந்தி அவர்களை அவரது இல்லத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து பேசினார். அப்போது திருமதி. சோனியாகாந்தி அவர்களின் உடல் நலம் குறித்து ராகுல்காந்தியிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விசாரித்து அறிந்தார். இச்சந்திப்பின் போது ராகுல்காந்தி அவர்கள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட மழை வெள்ளசேதம் குறித்து கேட்டறிந்தார். இருவரும் இந்திய தேசத்தின் மதச்சார்பற்ற நெறிமுறைகளைப் பாதுகாப்பதற்கான இந்தியா கூட்டணியின் முன்னேற்றம் குறித்து அளவளாவினர்.

### தாம்பரம் சானடோரியத்தில் ரூ.18 கோடி செலவில்

# பணிபுரியும் மகளிருக்கு புதிய விடுதிக் கட்டடம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 6-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சானடோரியம், ஹோம் சாலையில் 18 கோடி ரூபாய் செலவில் 461 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

பணிபுரியும் இடங்களில் பெண்களின் பங்களிப்பில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பெண்கள் கிராமங்கள், சிறு நகரங்களிலிருந்து பெருநகரங்களுக்கு பணிநிமித்தம் இடம் பெயர்ந்து வருகின்றனர். அவ்வாறு பணி நிமித்தமாக பெண்கள் தங்களது வீட்டை விட்டு வெளியில் தங்க வேண்டிய சூழ்நிலையில், அவர்களுக்கு குறைந்த வாடகையில், பணிபுரியும் இடத்திற்கு அருகில் தரமான மற்றும் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் அவசியத் தேவையாக உள்ளது. பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளின் தேவைகளை உணர்ந்த தமிழ்நாடு அரசு, பொருளாதார ரீதியாக நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகளை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அமைத்து வருகிறது.

பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகளை உருவாக்கிட “தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்” தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டு, புதிய விடுதிகளைகட்டுதல், பழையவிடுதிகளை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவை தற்போது அதிகரித்து வருவதைத் கருத்தில் கொண்டு, செங்கல்பட்டு மாவட்டம் - கூடுவாஞ்சேரி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் 226 மகளிர் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள 2 புதிய பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்கள், சென்னை - அடையாறு, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் 458 மகளிர் தங்கும் வகையில் புதுப்பிக்கப்பட்ட 7 பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.07.2023 அன்று திறந்து வைக்கப்பட்டு, செயல்பட்டு கொண்டிருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் தாம்பரம் சானடோரியம் பகுதியில், நான்கு தளங்களில் 18 கோடி ரூபாய் செலவில் 461 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தாம்பரம் சானடோரியத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ. கருணாநிதி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் திருமதி. அழகு மீனா உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் 6.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, ஆரணி எம்.பி. டாக்டர் விஷ்ணு பிரசாத், பேரூராட்சிகளின் இயக்குனர் கிரண் குரலா, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

## தென்னை நார் தொழில் துறையில் புதிய சகாப்தமாக - நிலையான

# வளர்ச்சிக்கு வழிவகுக்கும் “தென்னை நார் கொள்கை 2024 !”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் போட்டிகளை உணர்ந்தும், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள “தென்னை நார் கொள்கை 2024”–யை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன முதன்மை செயல் அலுவலர் முனைவர் இரா. கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

**சென்னை, ஜன. 6 –**

**தமிழ்நாட்டில் தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக “தென்னை நார் கொள்கை 2024” – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் போட்டிகளை உணர்ந்தும், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள “தென்னை நார் கொள்கை 2024”யை வெளியிட்டார்.

தென்னை நார் கொள்கையானது, தென்னை நார் தொழில் நிறுவனங்களின் தேவைகளை நிறைவேற்றுவது, அந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உறுதி செய்வது மற்றும் தொழிற் நிறுவன சங்கங்களின் கருத்துக்களை கேட்டறிந்து அதன்படி நடவடிக்கை மேற்கொண்டு இத்துறையின் வளர்ச்சியில் முதலீடு செய்த அனைத்து பங்குதாரர்களையும் பயன்பெறச் செய்வது ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். இக்கூட்டு அணுகுமுறையானது, இத்தொழில்துறையின் தேவைகளை நிறைவேற்றுவது மற்றும் அதன் முன்னேற்ற இலக்கை அடைவதற்கான தீர்வுகளை வழங்குவதையும் உறுதி செய்கிறது.

**தென்னை நார் தொழில் கொள்கையின் முக்கிய சிறப்பம்சங்கள் :**

**முன்னிருத்தலை ஊக்குவித்தல்:** உலகத்தரத்திலான மதிப்பு கூட்டப்பட்ட தென்னை நார் பொருட்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க, தென்னை நார் துகள் மற்றும் தென்னை நார் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்கான அதி நவீன ஆய்வகம் நிறுவப்படும். தென்னை நார் தொழிலில் நிலையான, சுற்றுச்சூழல் நட்புடன் கூடிய மதிப்பு கூட்டப்பட்ட நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு தென்னை நார் கொள்கை முன்னுரிமை அளிக்கிறது.

**சிறப்பு மையங்கள்:** தென்னை நார் துகள் மற்றும் தென்னை நார் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்காக பிரத்யேகமான சிறப்பு மையங்களை உருவாக்குவது தென்னை நார் கொள்கையின் நோக்கமாகும். இம்மையங்கள் புதிய மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான ஆராய்ச்சி, விவசாயம் மற்றும் தோட்டக்கலையில் மண்ணில்லா வளர்ப்பு ஊடக பயன்பாடு, புத்தொழில்கள் மற்றும் புதிய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் பயன்பாடு, தென்னை நார் சார்ந்த தொழில்களின் போட்டித்தன்மை ஆகியவற்றை மேம்படுத்தும்.

**சந்தை விரிவாக்கம்:** உள்நாடு மற்றும் சர்வதேச அளவில் சந்தையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் வகுக்கப்படும். உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்புகளுக்காக தென்னை நார் சார்ந்த நிறுவனங்கள் வர்த்தக் கண்காட்சிகளில் பங்கு பெறுவதை உறுதி செய்தல், சமச்சீர் தொழில்மயமாக்கல், சமூக சமபங்கு, சுழற் பொருளாதார நடைமுறைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த ஏற்றுமதி வாய்ப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் அரசு திட்டங்களில் புவி விரிப்பு போர்வை (Geo Textiles) போன்ற தென்னை நார் பொருட்களின் பங்களிப்பின் வாயிலாக சந்தை விரிவாக்கத்தை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**தென்னை நார் சார்ந்த தொழில் துறையில் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி முன்னேற தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இந்தக் கொள்கையானது கிராமப்புற பொருளாதார முன்னேற்றம், மகளிர் வேலைவாய்ப்பு, தென்னை விவசாயிகளுக்கான வருமானத்தினை அதிகரித்தல் புதுமை, போட்டித்திறன் மற்றும் பொறுப்புடன் கூடிய நிலையான வளர்ச்சி மூலம் புதிய சகாப்தத்தை அடைய வழிகோலுகிறது.**

**உள்கட்டமைப்பு மேம்பாடு:** தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கிட கிடங்குகளை நிறுவுதல் மற்றும் குழும மேம்பாடு ஆகியவை தென்னை நார் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிப் பாதையை மேம்படுத்தும்.

**போட்டித்தன்மை மற்றும் தரக்கட்டுப்பாடு:** தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல், மதிப்புக்கூட்டல் மற்றும் ஏற்றுமதி வணிக மேம்பாட்டிற்கான கருத்துப்பட்டறைகள் மற்றும் பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு வழிகள் மூலம் மேம்படுத்தப்பட்ட போட்டித்தன்மையை இந்தக் கொள்கை ஊக்குவிக்கிறது. ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் புதிய தென்னை நார் சார்ந்த பொருட்களின் உற்பத்தியை விரைவாக மேம்படுத்த இக்கொள்கை வழிவகுக்கும்.

**முதலீட்டு ஈர்ப்பு:** ஒற்றைச் சாளர முறை மற்றும் தொழில் முதலீட்டாளர்க்கான உகந்த சூழ்நிலை ஆகியவற்றின் மூலம் தென்னை நார் சார்ந்த தொழிலில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக அமைப்புகளுடன் கூட்டா ண்மைக்கான அடித்தளத்தை இந்தக் கொள்கை அமைக்கிறது. இம்முயற்சிகள் தென்னை நார் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கு புதிய வழிகளையும், உலகளாவிய அறிதல் ஆகியவற்றை முன்னெடுக்கும்.

தென்னை நார் சார்ந்த தொழில் துறையில் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி முன்னேற தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இந்தக் கொள்கையானது கிராமப்புற பொருளாதார முன்னேற்றம், மகளிர் வேலைவாய்ப்பு, தென்னை விவசாயிகளுக்கான வருமானத்தினை அதிகரித்தல் புதுமை, போட்டித்திறன் மற்றும் பொறுப்புடன் கூடிய நிலையான வளர்ச்சி மூலம் புதிய சகாப்தத்தை அடைய வழிகோலுகிறது.

இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன முதன்மை செயல் அலுவலர் முனைவர் இரா.கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## மீன்வளம் - மீனவர் நலத்துறை சார்பில் ரூ.134.29 கோடியில்

# 6 புதிய - 4 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன. 6 -**

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.134.29 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 6 புதிய மற்றும் 4 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் ரூ.11.65 கோடி செலவிலான கட்டடங்கள் - ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 134 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 புதிய மீன் இறங்கு தளங்கள் மற்றும் 4 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 11 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம், நிருவாகம் மற்றும் கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 134 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 புதிய மீன் இறங்குதளங்கள் மற்றும் 4 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 11 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம், நிருவாகம் மற்றும் கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என்.பெலிக்ஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மீன்வளத்தை பாதுகாத்தல், நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல், மீன் உற்பத்தியை அதிக ரித்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடித் துறை முகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட அரசு செயல்படுத்தி வருகிறது.

**கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்களை திறந்து வைத்தல்!**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு பகுதியில் 30 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம் மற்றும் தங்கச்சிமடம் கிராமத்தில் 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம், கன்னியாகுமரி மாவட்டம், கீழமணக்குடி கிராமத்தில் 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம், செங்கல்பட்டு மாவட்டம், பழைய நடுக்குப்பம் மற்றும் புதுநடுக்குப்பம் ஆகிய கிராமங்களில் தலா 11 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளங்கள் மற்றும் கோவளம் கிழக்கு கிராமத்தில் 3 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளம்;

கடலூர் மாவட்டம், தாழங்குடா கிராமத்தில் 13 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம், தூத்துக்குடி மாவட்டம், கீழவைப்பார் கிராமத்தில் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம், மயிலாடுதுறை மாவட்டம், சின்னமேடு கிராமத்தில் 9 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளம் மற்றும் வானகிரி கிராமத்தில் 8 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்கு தளம், என மொத்தம் 134 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 6 புதிய மீன் இறங்குதளங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட 4 மீன் இறங்குதளங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களை திறந்து வைத்தல்!**

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தூத்துக்குடி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மாணவர்களுக்கான 29 தங்கும் அறைகள், பொழுதுபோக்கு அறை, ஓய்வறை, உடற்பயிற்சி கூடம், வாசகர் அறை, விடுதி பாதுகாவலர் அறை உள்ளிட்ட வசதிகளுடன், தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 7 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம்;

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு, டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், கல்லூரி முதல்வர் அலுவலக அறை, ஆய்வகம், ஆசிரியர் கலந்துரையாடல் அறை, வாசகர் அறை உள்ளிட்ட வசதிகளுடன் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கல்லூரியின் இரண்டாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள நிருவாகம் மற்றும் கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம்;

என மொத்தம் 11 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு. பழனிசாமி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என். பெலிக்ஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் வ. விஜய் வசந்த், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என். ஸ்ரீதர், நாகர்கோயில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரத்திலிருநது காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராம லிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

## முதல் பக்கத் தொடர்ச்சி

கடுமையான பாதிப்புகளைப் பார்வையிட ஒன்றிய குழுவினர் டிசம்பர் 12 மற்றும் 13 தேதிகளில் வந்து பார்வையிட்டுச் சென்றனர். அதோடு, ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களும் தமிழ்நாட்டிற்கு வந்து, மிக்ஜாம் புயல் வெள்ள பாதிப்புகளை 7.12.2023 அன்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்து உரிய நிவாரணத் தொகையை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

### இதுவரை நிவாரண நிதி ஒதுக்கப்படவில்லை!

அதேபோன்று, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகனமழை காரணமாக ஏற்பட்ட பெருத்த பாதிப்புகளை ஒன்றியக் குழுவினர் 20.12.2023 அன்று நேரில் பார்வையிட்டனர். ஒன்றியக் குழுவினர் இம்மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளை ஆய்வு செய்திடத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மாநில அரசு செய்து தந்திருந்தது. இதுமட்டுமின்றி, ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களும் 26.12.2023 அன்று தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சென்று, வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்தார். மேலும், இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 2.1.2024 அன்று தமிழ்நாட்டிற்கு வருகை தந்து, திருச்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ள பாதிப்புகள் தொடர்பாக குறிப்பிட்டு, சேதங்கள் குறித்த தனது வருத்தத்தையும், வேதனையையும் பதிவு செய்திருந்தார்.

ஆனால், ஒன்றிய குழுக்களின் வருகைக்குப் பின்னரும், ஒன்றிய அமைச்சர்கள் பார்வையிட்டதற்குப் பிறகும், நிவாரணத் தொகை கோரி தமிழ்நாடு அரசின் சார்பில் இரண்டு கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், ஒன்றிய அரசிடமிருந்து இதுவரை நிவாரணப் பணிகளுக்கென எந்தவொரு நிவாரணத் தொகையும் பெறப்படவில்லை. இதுபோன்ற இயற்கைப் பேரிடர்கள் மற்ற மாநிலங்களில் ஏற்பட்டபோது, குறுகிய காலத்திற்குள் ஒன்றிய அரசு நிவாரண நிதியினை தேசிய பேரிடர் நிதியிலிருந்து வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மாநில மக்களின் நலனில் அக்கறை கொண்டு, இரண்டு பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் தற்காலிக சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காகவும், கடுமையாக பாதிக்கப்பட்ட ஏழையெளிய, நடுத்தர மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திடவும், தமிழ்நாடு அரசு இதுவரை 2,100 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது.

அதுமட்டுமின்றி, இந்த இயற்கைப் பேரிடர்களினால் பாதிக்கப்பட்ட சிறு, குறு தொழில் நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள், சிறு வியாபாரிகள், விவசாயிகள், மீனவர்கள் போன்ற சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் 1000 கோடி ரூபாய் மதிப்பிலான வாழ்வாதார மறுகட்டமைப்புத் திட்டத்தினையும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு அரசு கோரியுள்ள 37,907.19 கோடி ரூபாயினை உடனடியாக வழங்கிட வலியுறுத்தி, தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்திக்க நேரம் கோரப்பட்டுள்ளது"

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சேப்பாக்கம் பகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, ஜன.6-

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதிக் கழகம் சார்பில் வாக்குச்சாவடி பாக முகவர்களுக்கான (பி.எல்.ஏ.-2 - பி.எல்.ஏ.சி.) ஆலோசனைக் கூட்டம் மற்றும் நிதி உதவி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (6.1.2024 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு, ஒய்.எம்.சி.ஏ. மைதானம் ராயப்பேட்டையில் நடைபெறுகின்றது.



செஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து மூன்று வழித்தடங்களில் புதிய பேருந்து சேவையை அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

## 6.74கோடி ரூபாய் மதிப்பீட்டில்

# செஞ்சியில் அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையம்!

## அமைச்சர் கே .என். நேரு திறந்து வைத்தார்!

செஞ்சி, ஜன. 6-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையத்தை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு அதிநவீன புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்அனைவரையும் வரவேற்றார். பேரூராட்சிகளில் இயக்குனர் கிரண் குராலா திட்ட அறிக்கையை வாசித்தார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு 6 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அதிநவீன அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்துமுத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என். நேரு பேசுகையில்:

நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் நாளை முதல்வர் காணொலி மூலம் ரூ 1933 கோடி மதிப்பிலான கட்டிடங்களை திறந்துவைக்கிறார். மேலும் நகராட்சி நிர்வாக துறைக்கு முதல்வர் ரூ 24 ஆயிரம் கோடி ஒதுக்கி உள்ளார்.

பேரூராட்சி நிர்வாகத்திற்காக ரூ 5 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் 490 பேரூராட்சிகளில் 31 பேரூராட்சிகளில் புதிய கட்டிடங்கள் கட்ட ரூ 80 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

51 பேரூராட்சிகளில் வார சந்தை அமைக்க ரூ 110.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது.

13 பேரூராட்சிகளில் ரூ 20.44 கோடி மதிப்பீட்டில் அறிவு சார் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் குடிநீருக்கு பத்தாயிரம் கோடி ஒதுக்கீடு செய்தனர்.

முதலமைச்சராக தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கிட 3 ஆண்டுகளில் ரூ 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் .

அந்த வகையில் செஞ்சி பேரூராட்சிகளில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு கடந்த 2.1/2 ஆண்டுகளில் ரூ 53.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி நகர்புறங்களில் 45 சதவீதமக்கள் வாழ்ந்துவந்தனர் தற்போது இது 60 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மேலும் சென்னை தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நகராட்சி துறை சார்பில் செய்த பணிகள் அளப்பறியாதது எனதெரிவித்த அமைச்சர் கே.என். நேரு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நகராட்சி துறைக்கு தரும் ஊக்கம் தான்அனைத்து பணிகளையும் செய்ய முடிந்ததுஎன அவர் தெரிவித்தார்.

முன்னதாக அமைச்சர் செஞ்சிமஸ்தான் பேசுகையில்:

நான் முதல் முறையாக 1986ம் ஆண்டு பேரூராட்சி தலைவராகப் பெறுப்பேற்ற போது நகரில் குடிப்பதற்கும் தண்ணீர் இல்லாத நகரமாக இருந்தது. திமுக ஆட்சியில் திருக்கோவிலூார் தென் பெண்ணை ஆற்றில் 54 கி.மீ., தூரத்தில் இருந்து 6 கோடி ரூபாய் மதிப்பில் செஞ்சி - அனந்தபுரம் கூட்டு குடிநீர் திட்டம் கொண்டு வரப்பட்டது. முதல்வர் ஸ்டாலின் துணை முதல்வராக இருந்த போது செஞ்சிக்கு என தனி குடிநீர் திட்டம் அறிவித்து ரூ16 கோடி ஒதுக்கி எல்லோருக்கும் குடிநீர் வழங்கினார். இப்போது அமைச்சர் நேரு ரூ33 கோடி ஒதுக்கி அனைத்து வீடுகளுக்கும் தனித்தனியாக குடிநீர் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

செஞ்சியில் சக்கராபுரம் பழயை காலனி, புதிய காலனி, சிறுகடம்பூர் காலனியில் சமுதாய கூடம் கட்டவும், செஞ்சியில் அறிவு சார் மையம் அமைக்கவும், செஞ்சி கோட்டை ஆஞ்சநேயர் கோவிலுக்கு செல்லும் சாலையை தார் சாலையாக அமைக்கவும், மேல்களவாய் ரோட்டில் சங்கராபரணி ஆற்றில் மேம்பாலம் கட்டுவதற்கு ஏதுவாக பேரூராட்சியிடம் உள்ள 1600 மீட்டர் சாலையை நெடுஞ்சாலை துறையிடம் ஒப்படைக்கவும் அமைச்சர் கே.என். நேரு அனுமதி அளிக்க வேண்டும். இதை செஞ்சி நகர மக்கள் சார்பாக கேட்டு கொள்கிறேன் என்றார்.

இதைத் தொடர்ந்து செஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து மூன்று வழித்தடங்களில் புதிய பேருந்து சேவையை அமைச்சர் கே என் நேரு ,அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் விஷ்ணு பிரசாத், பேரூராட்சிகளின் கண்காணிப்பு பொறியாளர் திருமா வளவன், பேரூராட்சிகளின் கடலூர் மண்டல பேரூராட்சி உதவி இயக்குனர் வெங்கடேசன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன்,செந்தமிழ் செல்வன், சீத்தாபதி சொக்கலிங்கம்,மாநில விவசாய அணி இணை செயலாளர் அன்னியூர் சிவா,மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், வல்லம் அமுதா ரவிக்குமார்,மரக்காணம் தயாளன் ஒலக்கூர் சொக்கலிங்கம் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன்,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன்,துணைச் செயலாளர் ரவிக்குமார்,பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ், சாந்தி ஏழுமலை,துணை சேர்மன்கள் ஜெயபாலன், பழனி,விஜயலட்சுமி முருகன், ராஜலட்சுமி செயல்மணி,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன்,சாந்தி சுப்ரமணியன், நாராயணமூர்த்தி, துரை ,இளம்வழுதி, மணிமாறன்,செழியன், ரவிச்சந்திரன், ராஜாராமன், நகர செயலாளர் கண்ணன் ,பேரு செயலாளர்கள் கார்த்திக், சம்பத்உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.பேரூராட்சி செயல் அலுவலர்செந்தில்குமார் நன்றி கூறினார்.

# அரியலூர் மாவட்டம், விளந்தை அரசு பள்ளிகளில் திடீர் ஆய்வு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொண்டார்!

அரியலூர், ஜன, 6-

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், விளந்தை ஊராட்சியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திடீர் ஆய்வு மேற்கொண்டு பள்ளியினை பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிற்கிணங்க, பள்ளிக் பல்வித் துறை அமைச்சர் அவர்கள் 234/77 ஆய்வுப் பயணத்திட்டத்தின் கீழ் 123வது சட்டமன்ற தொகுதியாக ஜெயங் கொண்டம் தொகுதிக்குட்பட்ட விளந்தை ஊராட்சி யில் ஒரே பள்ளி வளா கத்தில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு, பள்ளி உள்கட்டமைப்பு வசதிகளை பார்வையிட்டு விரிவான ஆய்வு மேற்கொண்டு மைதானம் மேம்பாட்டிற்கும், பள்ளி வளாக மேம்பாட்டிற்கும் உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். மேலும், அப்பள்ளிகளில் உள்ள பயன்பாட்டில் இல்லாத கட்டடங்களின் நிலை குறித்து கவனத்தில் கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலரிடம் அறிவுறுத்தினார். மேலும், கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

தொடர்ந்து மாணவர்களின் பாடப்புத்தகத்தினை வாசிக்கச் சொல்லி அவர்களின் வாசிப்புத் திறனை ஆய்வு மேற்கொண்டார். மேலும், பள்ளி மாணவ, மாணவியருடன் கலந்துரையாடி பொதுத்தேர்விற்கு நல்ல முறையில் படித்து தேர்ச்சி பெற்று கல்லூரியில் சேரவேண்டும் என்பதை இலக்காக கொண்டு செயல்பட வேண்டும் எனவும், பாடங்களில் சந்தேகங்கள் ஏற்படும் போது ஆசிரியர்களிடம் தயங்காமல் கேட்டு அதனை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் எனவும், பொதுத் தேர்வு குறித்து எந்தவித அச்சமும் மாணவர்களுக்கு ஏற்படக் கூடாது என்ற நோக்கத்தில் தான் அரையாண்டு தேர்வுகளிலேயே முழுபாடத்திட்டங்களுக்கும் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. மேலும் திருப்புதல் தேர்வுகளும் நடத்தப்படவுள்ளது. எனவே பொதுத் தேர்வினை சிறப்பான முறையில் எழுதி நல்ல கல்லூரியில் சேருவதை மட்டுமே இலக்காக கொள்ள வேண்டும் எனவும், பொதுத் தேர்வு எழுத உள்ள மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துகளை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது விளந்தை அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் தமிழ்முருகன், விளந்தை அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் (பொ) அபிலா, பள்ளிக்கல்வித் துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## புதிய பேருந்து நிலையமான

# கிளாம்பாக்கத்திற்கு புதிய ரயில் நிலையம்!

## தமிழ்நாடு அரசு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு!

சென்னை, ஜன. 6 -

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக கிளாம்பாக்கத்தில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் பேருந்து முனையத்துக்கு பயணிகள் செல்ல வசதியாக அங்கு புதிய ரயில் நிலையம் அமைக்க முதற்கட்ட மாக 20 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

பிரம்மாண்டமாக கட்டப்பட்டிருக்கும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்துக்கு செல்ல கூடுதல் இணைப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தாம்பரம் செங்கல்பட்டு வழித்தடத்தில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகே புறநகர் ரெயில் நிலையம் அமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு தெரிவித்தது. கடந்த அக்டோபர் மாதம் வண்டலூர் ஊரப்பாக்கம் இடையே கிளாம்பாக்கத்தில் புதிய ரெயில் நிலையம் அமைப்பதற்கு தெற்கு ரெயில்வே டெண்டர் கோரியது.

இந்த நிலையில், கிளாம்பாக்கத்தில் புதிய ரெயில் நிலையம் அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமான சி.எம்.டி.ஏ. சார்பில் முதற்கட்டமாக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய ரயில் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டு இறுதிக் குள் முடிக்க தெற்கு ரெயில்வேயிடம் சி.எம்.டி.ஏ. கோரிக்கை விடுத்துள்ளது. இந்த ரெயில் நிலையம் புறநகர் மின்சார ரெயில்கள் நின்று செல்லும் வகையில், 3 நடைமேடைகளுடன் அமைய உள்ளது.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமகன்.ஈ.வெ.ரா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராமச்சந்திரன் தலைமையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பன்னீர்செல்வம் பூங்காவில் திருமகன் ஈ.வெ.ரா. திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் பெரியார் மன்றத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈரோடு கிழக்கு ஈவிகேஎஸ்.இளங்கோவன், திருச்செங்கோடு ஈ.ஆர்.ஈஸ்வரன் உள்ளிட்ட அனைத்து கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திருவண்ணாமலை முருகையன்
## சனவரி 6 (2003)



திருவண்ணாமலையில் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். தொடக்கக் காலத்திலிருந்து கழக உறுப்பினராக இருந்தவர்.

வடஆற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

மூன்று முறை தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். 1980ல் திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.


தலைமைக் கழகம்
தி.மு.க.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், அரியநாயகி அம்மன் திருக்கோயில் குளம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பார்வையிட்டார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் எஸ்.பாலகிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு சந்தித்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 கோடியே 6 இலட்சத்து 27 ஆயிரத்து 472 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்திரகாந்த் காம்ளே, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்/ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ச. விஜயகுமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஹனிஷ் சப்ரா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ். சிவராசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் செயலாளர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




### கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில்

# தேவையான அனைத்து கூடுதல் வசதிகளையும் நிறைவேற்றித் தருவோம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, ஜன. 6-

முதலமைச்சர் அவர்களால் கிளாம்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்ட “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து தேவையான கூடுதல் வசதிகளையும் படிப்படியாக நிறைவேற்றிதருவோம் என்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களால் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்ட “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” நேற்று முன்தினம் (4.1.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு, இம்முனையத்தில் பயணிகள் சுலபமாக செல்வதற்காக MTC மற்றும் SETC இடையே இணைப்புப் பாதை அமைப்பது குறித்தும், மாற்றுத்திறனாளிகளுக்கு மின்கல ஊர்தியில் Wheel Chairs அமைப்பது குறித்தும், பயணிகளுக்கு தேவையான கூடுதல் வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் சென்னைப்பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள”கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” தமிழ்நாடு முதலமைச்சர் 30.12.2023 அன்று திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். 6வது நாளான நேற்று முன்தினம் (4.1.2024) கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. தினம்தோறும் 5,000-க்கும் மேற்பட்ட பயணிகள் தற்போது பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். தினந்தோறும் துறையினுடைய செயலாளர்சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழும உறுப்பினர் செயலர்அன்சூல் மிஸ்ரா, தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் முனைவர். அமல்ராஜ் இப்பேருந்து முனையத்தில் பயணிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும், பயணிகளிடம் கேட்டறிந்து, தேவைகளை பூர்த்தி செய்கின்ற பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்கள்.

88.56 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட இந்த பேருந்து முனையமானது இந்தியாவிலேயே மிகப்பெரிய பேருந்து முனையம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த பேருந்து முனையம்திட்டமிடப்பட்ட காலத்திற்கும் தற்போது இந்த பேருந்து முனையம்பயன்பாட்டுக்கு வந்த காலத்திற்கும் பார்த்தால் போக்குவரத்து அதிகமாக இருப்பதை நாம் கணக்கிட்டு சொல்ல முடியும். அன்றைய காலகட்டத்தில் இதை திட்டமிடுகின்ற பொழுது அடுத்த ஒரு 50 ஆண்டுகளுக்கு தேவையான அளவிற்கு அனைத்து பணிகளையும் நிறைவேற்றி இருக்க வேண்டும். ஆனால் 2013-ம் ஆண்டு பேருந்து முனையம்அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்ட நிலையில் 2018-ம் ஆண்டு ஒப்பந்தம் கோரப்பட்டு 2019-ம் ஆண்டு துவக்கப்பட்டு இருந்தாலும் பணிகள் 30% அளவுக்குத்தான் நிறைவுற்று இருந்தது. மீதமுள்ள பணிகளையும். தேவையான பல்வேறு பயணிகளுக்கு தேவைப்படுகின்ற அடிப்படை கட்டமைப்புகளையும் உருவாக்கி இருந்தோம்.

இப்பேருந்து முனையம்செயல்பாட்டிற்கு வந்த பிறகுசிறிய சிறிய பிரச்சினைகள் கவனத்திற்கு வந்தவுடன் அவைகளை முழு வீச்சில் நிறைவேற்ற முதலமைச்சர் உத்தரவிட்டதற்கிணங்க, தொடர்ந்து இது போன்ற ஆய்வுக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் நேற்று சர்வீஸ் ரோடு எனப்படுகின்ற அந்த சாலையில் சங்கர வித்யாலயா என்ற பள்ளிக்குச் செல்பவர்கள் எதிர்ப்புறமாக அந்த பள்ளிக்கு செல்வதற்கு பாதையை பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த பேருந்து முனையம்பயன்பாட்டிற்கு வந்தபிறகு அந்த சாலையின் வழியாக பேருந்துகள் வருவதால் இடையூறு இருப்பதாக பெற்றோர்கள் எடுத்துக் கூறியதற்கிணங்க தற்காலிகமாக பள்ளிக்கு பின்புறம் இருக்கின்ற ஒரு வழியை ஏற்படுத்தி தரவும், அதேபோல் பள்ளியினுடைய காலை நேரம் மாலை நேரத்தில் அந்த பாதையில் பேருந்துகளை அனுமதிக்க வேண்டாம் என்றும் தற்போது முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது. அதே போல அருகாமையிலேயே இருக்கின்ற ஆதி திராவிடர் பள்ளி, அந்த பள்ளியிலும் 500-க்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்கள் படித்து வருகின்றார்கள். அந்தப் பள்ளியும் இந்த கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் பேருந்துகள் வருவதால் இடையூறு இருப்பதாக கவனத்திற்கு வந்திருக்கிறது. அதற்கும் மாற்று ஏற்பாடாக பள்ளியை ஒட்டி பின்புற வழியை பயன்படுத்தி அவர்களுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தந்து வருங்காலத்தில் அந்த பள்ளியை வேறு இடத்திற்கு புதிய கட்டுமானத்தை ஏற்படுத்தி பள்ளியினுடைய இடத்தை மாற்றுவதற்கு இன்றைக்கு திட்டமிட்டு இருக்கிறோம்.

அதேபோல் மாநகர பேருந்துகள் வருகின்ற இடத்தில் MTCபேருந்துகளில் இருந்து இறங்கி SETC பஸ்ஸில் பயணம் செய்வதற்குண்டான பயணிகள் உடைய தூரம் அதிகமாக இருப்பதை கணக்கிட்டு கூடுதலாக மூன்று பேட்டரி கார்கள் வாங்கப் பட்டு இருக்கின்றன. அதில் ஒன்று மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கான வசதி பொருந்திய பேட்டரி கார் வாங்கப் பட்டு இருக்கிறது. அதே போல் MTCபேருந்து நிலையத்திலிருந்து SETCபேருந்து முனையத்திற்கு வருவதற்கு பாதைகளில் இடையிலே இருக்கின்ற இரண்டு சுவர்களை அகற்ற வேண்டும் என்று ஊடகங்கள் தெரிவித்து இருந்தது. அந்த ஒரு சுவற்றை அகற்றி விட்டு அதற்கு படிக்கட்டுகளும், சாய்வுதளமும்அமைப்பதற்குண்டான பணிகள் தற்போது நடைபெற்று கொண்டிருக்கின்றது.மேலும், இன்று நடைபெற்ற கள ஆய்வில் மற்றொரு இடத்தில் சுவற்றையும் அகற்றினால் பயணிகள் எளிதாக வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று அலுவலர்கள் எடுத்துக் கூறினார்கள் அதையும் அகற்றி விட்டு அதில் படிக்கட்டுகளை அமைத்து சுலபமாக MTC பேருந்து நிலையத்திலிருந்து SETC பேருந்துமுனையத்திற்கு வருவதற்கான ஏற்பாடுகள் அமைக்கப்படவுள்ளன. நாங்கள் இன்று ஆய்வு செய்ததில் கிட்டத்தட்ட 20 யூனிட்டுகள் கொண்ட 524-க்கும் மேற்பட்ட பொதுக்கழிப்பிடங்கள் முழுமையாக பயன்பாட்டில் இருக்கின்றன. அதேபோல் குடி நீருக்காக அமைக்கப்பட்டு இருக்கின்ற அனைத்து குழாய்களும் பயன்பாட்டில் இருக்கின்றன.

அதேபோல். 6,50,000 சதுர அடியில் கட்டப்பட்டிருக்கின்ற இந்த இந்த முனையக் கட்டிடத்தில் எங்கும் ஒரு இடத்தில் கூட குப்பைகள் இல்லை. அடுத்து முழுவதுமாக பராமரிப்பில் சுத்தமாக இருக்கின்றது. இந்த கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் அமைய இருக்கின்ற தொல்லியல் அறிவு சார் மையம் மற்றும் காலநிலை பூங்காவும் பிப்ரவரி 2024-க்குள் பயன்பாட்டிற்கு வருவதற்குண்டான ஏற்பாடுகளை மேற்கொண்டு இருக்கின்றோம். அதேபோல 6 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டிருக்கின்ற நீருற்றுடன் கூடிய பூங்காவை வெகு விரைவில் திறப்பதற்குண்டான ஆய்வையும் இன்றைக்கு மேற்கொண்டு இருக்கின்றோம். அதோடு மட்டும் இல்லாமல் பயணிகளிடையே பாதுகாப்பிற்காக கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் முதலமைச்சர் கடந்த ஆண்டு இங்கே காவல் நிலையம் அமைப்பதற்குஅறிவித்து இருக்கிறார்கள். அந்த காவல் நிலைய கட்டுமானப் பணியும் இந்த பொங்கல் முடிந்தவுடன் துவக்குவதற்குண்டான ஆய்வினையும் இன்றைக்கு மேற்கொண்டு இருக்கின்றோம். அதேபோல் முகப்பில் அமைக்கப்பட இருக்கின்ற ஒரு வளைவு(ARCH) அதையும் விரைவுபடுத்தி இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்ய இருக்கின்றோம்.

குறிப்பாக கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் அமைய இருக்கின்ற புதிய ரயில் நிலையம். அந்த ரயில் நிலையத்தின் பணிகளை வேகப்படுத்துவதற்கு 20 கோடி ரூபாயை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கேற்ப வழங்கியிருக்கின்றோம். அந்த பணிகளுக்கு உண்டான ஒப்பந்தம் கோரப்படுகின்ற பணிகளையும் அந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு ரயில்வே துறையுடன் நம்முடைய துறையினுடைய செயலாளர், உறுப்பினர், செயலாளர் கலந்தாய்வு கூட்டத்தை மேற்கொள்ள இருக்கின்றார்கள். அங்கே அமைக்கப்படுகின்ற ஸ்கைவாக் பணிகளையும். விரைவுபடுத்துவதற்குண்டான பல்வேறு திட்டங்களை இன்றைக்கு இந்த ஆய்வுக்கூட்டத்தில் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதேபோல் இது எட்டு வழிச்சாலை என்பதால் மக்கள் வருங்காலங்களில் பேருந்து முனையம் முழுமையாக பயன்பாட்டிற்கு வரும்போது எந்த வகையில் சாலையை கடக்க வேண்டும் என்று. முயற்சிப்பவர்களுக்கு எந்த வகையிலும் விபத்துகள் ஏற்படாமல் இருப்பதற்காக ஒரு நடை மேம்பாலத்தை அமைப்பதற்கும் இன்றைய ஆய்வுகூட்டத்தில் முடிவு எடுத்திருக்கின்றோம்.

அதேபோல் ஆம்னி பேருந்துகளுக்கு முடிச்சூரில் கட்டப்பட்டு கொண்டிருக்கின்ற ஆம்னி பேருந்து நிறுத்தும் இடத்தை (Omni Bus Parking) விரைவாக முடிப்பதற்கு மார்ச் மாதத்திற்குள் அந்தப் பணிகளை முடித்து ஆம்னி பேருந்துகள் அங்கு நின்று வருவதற்கு ஏற்பாடுகளை விரைந்துசெய்வதற்கும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. இப்படி வாரம் தோறும் இரண்டு நாட்களாவது கிளாம் பாக்கம் பேருந்து முனையத்தினுடைய தேவைகளை அறிந்து முழுமையாக இந்த கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் படிப்படியாக நிறைவேற்றி தருவோம் என்ற உறுதியை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர்/ கூடுதல் தலைமை இயக்குநர் முனைவர். அ.அமல்ராஜ், சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் திருமதி.ப.காயத்ரி கிருஷ்ணன், காவல் துணை ஆணையர்கள் (தாம்பரம் சட்டம் & ஒழுங்கு) பவன் குமார், (போக்குவரத்து) ந.குமார், தலைமைத் திட்ட அமைப்பாளர் பாலசுப்பிரமணியன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மு. இந்துமதி, திருமதி.நா.அங்கையர்கண்ணி, SETC பொது மேலாளர் குணசேகரன், செயற் பொறியாளர்கள் ராஜன்பாபு, பாலமுருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.





தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, தேனாம்படுகை ஊராட்சியில், 2022–2023 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ரூபாய் 42 லட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில், கிராம ஊராட்சி செயலக கட்டிடம் கட்டுவதற்கு, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவரும், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளருமான எஸ்.கே.முத்துசெல்வம், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஜெ.சுதாகர், மாவட்ட தி.மு.க. பிரதிநிதி டி.என்.கரிகாலன், ஊராட்சி மன்ற தலைவர் ச.முத்துகுமார் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழக தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### 51 அரசுத்துறை அரங்குகளுடன்

# சென்னை தீவுத்திடலில் சுற்றுலாப் பொருட்காட்சி!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, ஜன.6-

சென்னை தீவுத்திடலில் 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023 -2024 நடைபெற உள்ளதையொட்டி, அரசுத் துறைகளின் அரங்கங்கள் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து, முதன்மை செயலாளர், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர், மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா முன்னிலையில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும், சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ் நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார். மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் மற்றும் மேலாளர்கள் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் தங்கும் வகையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும் என அறிவுறுத்தினார்.

பின்னர் சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் சென்னை தீவுத்திடலில் 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023 --2024 நடைபெற உள்ளதையொட்டி, அரசுத் துறைகளின் அரங்கங்கள் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்குமாறு துறை அலுவலர்கள் மற்றும் அரங்கம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடம் அறிவுறுத்தினார்.

சென்னை தீவுத்திடலில் 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023 - 2024 ஐ யொட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, காவல்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை, தொழில், முதலீடு மற்றும் வர்த்தகத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, பள்ளி கல்வித்துறை, உயர் கல்வித்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணித் துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பட்டு வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை, சுற்றுலாத் துறை, தகவல் தொழில் நுட்பத்துறை, சி.எம்.டி.எ, ஆவின், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை மாநகராட்சி உள்பட தமிழ்நாடு அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அரங்கங்கள் - 47, ஒன்றிய அரசு நிறுவனங்களின்2 அரங்கங்கள், பிற மாநில அரசு அரங்கங்கள் - 2 என மொத்தம் - 51 அரங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வுக்கூட்டம் மற்றும் ஆய்வுகளின் போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குறிப்பு: தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் தீவுத்திடலில் கடந்த 1974-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 70 நாட்கள் இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை நடத்தி வருகிறது.


கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு, முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி சென்ற ஆண்டு 4.1.2023 தொடங்கி 23.03.2023 வரை 73 நாட்கள் நடைபெற்ற 47-வது பொருட்காட்சியில் அரசுத்துறைகளின் அரங்கங்கள் அமைக்கப்பட்டு, 8 லட்சத்து 30 ஆயிரம் பார்வையாளர்கள் கண்டுகளித்தனர். மேலும் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களும் இப்பொருட்காட்சியினை பார்வையிட்டு அரசின் ஆக்கபூர்வ பணிகளையும் மக்கள் நலனுக்காக செயல்படுத்தும் புதிய திட்டங்களையும் தெரிந்து கொண்டார்கள். இப்பொருட்காட்சியின் மூலம் பத்தாயிரம் பேர் நேரடியாகவும், முப்பதாயிரம் பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளைப் பெற்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.



வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாளையொட்டி கரூர் மாவட்டக் கழகம் சார்பில் கரூர் மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.




கலைஞர் 100
1924 - 2023
நாள்: 06.01.2024
சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: YMCA மைதானம்,
ராயப்பேட்டை
சேப்பாக்கம் பகுதி தி.மு.க சார்பில்
வாக்குச்சாவடி
பாக முகவர்களுக்கு (BLA 2) (BLA C)
ஆலோசனை வழங்கி
நலத்திட்ட உதவிகள்
வழங்க வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை
இளம்தலைவர்
மாண்புமிகு
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
திரு. தயாநிதி மாறன் MP, திரு. மு.க.தமிழரசு, திரு. நே.சிற்றரசு MC
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர்
பணிகள் குழு தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
அன்புடன்
எஸ்.மதன்மோகன் MC
சேப்பாக்கம் பகுதி கழக செயலாளர்
9வது மண்டல குழு தலைவர், பெருநகர சென்னை மாநகராட்சி
சேப்பாக்கம் பகுதி தி.மு.க - சென்னை மேற்கு மாவட்டம்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்த்குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வேலூர் மாநகராட்சியின் மேயர், துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஒரு மாத ஊதியத் தொகையாக மொத்தம் 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், பொன்பியூர் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் எம். பொன்னுசாமி, செயல் இயக்குநர்கள் சூர்ய பிரகாஷ், லட்சுமிபதி ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், காக்னிசென்ட் (Cognizant) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜேஷ் நம்பியார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காக்னிசென்ட் (Cognizant) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் அரசியல் விவகாரத் துறையின் புருஷோத்தமன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், கும்பகோணம் பரஸ்பர சகாயநிதி நிறுவனத்தின் (KMBF) தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். கல்யாணசுந்தரம் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி. வேலப்பன், வழக்கறிஞர் எஸ்.கே. ஸ்ரீதர், வினோத் வேலப்பன் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு திருப்பூர் மாநகராட்சியின் சார்பாக மேயர், துணை மேயர், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள், திருப்பூர் டையர்ஸ் அசோசியேஷன், திருப்பூர் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தன்னார்வலர் அமைப்புகள் என அனைவரும் அளித்த 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை ராதா பொறியியல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்கள் வி.ஆர். செந்தில்குமார் மற்றும் திருமதி வி. ராதா செல்வி, இயக்குநர் திருமதி பத்மாவதி ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. . மதிவேந்தன், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் (Tamil Nadu Forest Plantation Corporation Ltd.,(2022 2023 நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 17 கோடியே 73 இலட்சத்து 86 ஆயிரத்து 921 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி வி. கருணபிரியா, ஆகியோர் உள்ளனர்.

### ரூ.18 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில்

# காவல் துறைக்கு புதிய கட்டடங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 6 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 18 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 62 காவலர் குடியிருப்பு கள், 2 காவல் நிலையங்கள், திருநெல்வேலி மாநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படைகளுக்கு 2 ஒருங் கிணைந்த நிர்வாகக் கட்ட டங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

காவல்துறை என்பது குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, இவ்வரசு பொறுப்பேற்றப் பிறகு காவல் நிலையங்களுக்காக 46.28 கோடி ரூபாய், காவல் குடியிருப்புகளுக்காக 764.13 கோடி ரூபாய், காவல் துறையின் இதர கட்டடங்களுக்கென 115.77 கோடி ரூபாய், சொந்த இல்லத் திட்டத்தின்கீழ் 55.19 கோடி ரூபாய் மற்றும் சிறப்பு பராமரிப்புப் பணிகளுக்கென 149 கோடி ரூபாய் என பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கு 1130.37 கோடி ரூபாயும், காவல் கண்காணிப்பு பணிகளுக்கு ரோந்து வாகனங்களுக்காக 88 கோடியே 91 இலட்சம் ரூபாயும், காவல்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 571.15 கோடி ரூபாயும் என மொத்தம் 1790 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களைக் காவல்துறையின் மேம்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம், முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம் - ஆனைமலையில் 4 கோடியே 69 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 30 காவலர் குடியிருப்புகள் மற்றும் நாமக்கல் மாவட்டம் - குமாரப்பாளையத்தில் 4 கோடியே 8 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 32 காவலர் குடியிருப்புகள், என மொத்தம் 8 கோடியே 78 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 62 காவலர் குடியிருப்புகளைத் திறந்து வைத்தார்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடியில் 67 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள போக்குவரத்து காவல் நிலையக் கட்டடம், திருப்பூர் மாவட்டம் - அவிநாசிபாளையத்தில் 1 கோடியே 17 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையக் கட்டடங்களும், திருநெல்வேலி மாநகர ஆயுதப்படை மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படைகளுக்கு பாளையங்கோட்டை ஆயுதப் படை வளாகத்தில் 7 கோடியே 56 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 ஒருங்கிணைந்த நிர்வாகக் கட்டடங்கள், என மொத்தம் 18 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மை செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், விளந்தை ஊராட்சி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (04.01.2024) திடீர் ஆய்வு மேற்கொண்டு மாணவியர்களுடன் கலந்துரையாடி அறிவுரைகளை வழங்கினார்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் பொன்னமராவதி வடக்கு, தெற்கு, வடக்கு ஒன்றியம் மற்றும் நகர கழகம் சார்பில் பொன்னமராவதியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி, கழக செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வுகளில் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், ஒன்றியச் செயலாளர்கள் அ.அடைக்கலமணி, அ.முத்து, பேரூர் கழக செயலாளர் அ.அழகப்பன், தனலெட்சுமி அழகப்பன், வளர்மதி, டாக்டர் சுதர்சன், வி.ஆர். இளையராஜா, ராமு, ஆலவயல் முரளி சுப்பையா, முத்தையா, சுந்தரி ராமையா, இடையாத்தூர் பாண்டியன், பழனிச்சாமி, சிக்கந்தர், ராமச்சந்திரன், கோவை ராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை உள்ளிட்ட 4 மாவட்ட

# சிறுவணிகர்களுக்கு முதலமைச்சரின் சிறப்பு சிறுவணிகர் கடன் திட்டம்!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!


சென்னை, ஜன. 6 -

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, கூட்டுறவுத்துறையின் மூலம் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சிறுவணிகர்களுக்கான "முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்" செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான சிறப்பு முகாம்கள் சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் காஞ்சிபுரம். திருவள்ளூர். செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் நடைபெறவுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது :

தமிழ்நாட்டில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் வீசிய "மிக்ஜாம்" புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப் பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் குறிப் பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, "மிக்ஜாம்" புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சிறு வணிகர்களின் தொழில் பயன்பாட்டிற்கான இயந்திரங்களை பழுதுபார்க்கவும் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கவும் "முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்" எனும் புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



**குறைந்த வட்டியில் அதிகபட்சக் கடன்!**

சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் காஞ்சிபுரம். திருவள்ளூர். செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் குறைந்த வட்டியில் அதிக பட்ச கடன் தொகை ரூ.10,000/ வரை வழங்கப் படும்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள், தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்த அட்டை உடைய தெருவியாபாரிகள், சிறு வணிகர்கள், வணிக உபயோகத்திற்காக மின் இணைப்பு பெற்ற சிறு கடை வியாபாரிகள், தெருவோரங்களில் வியாபாரம் செய்யும் பூ வியாபாரிகள், காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்பவர்கள், சாலையோர உணவகங்கள் நடத்துபவர்கள், கைவினைஞர்கள், மீனவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் (புயலால் பழுதடைந்த ஆட்டோவினை சீரமைக்க), அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதையில் கடை வைத்திருப்பவர்கள் ஆகிய சிறு வணிகர்கள்/ சிறு, குறு தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தின் மூலம் கடன் பெற தகுதியானவர்கள் ஆவர்.

**ஜனவரி 5 முதல் 12 வரை முகாம்கள்!**

இக்கடனை 50 வாரங்களில் வாரந்தோறும் ரூ.200/ என்ற அடிப்படையில் ஒரு வருட காலத்திற்குள் உரிய வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் அல்லது மாதந்தோறும் ரூ.1000/ வீதம் உரிய வட்டியுடன் திருப்பி செலுத்தலாம்.

"முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்" முகாம்கள் நான்கு மாவட்டங்களிலும் 05.01.2024 முதல் 12.01.2024 வரை நடைபெறவுள்ளது.

சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகளான தியாகராய நகர் ரோட்டில் செயல்பட்டு வரும் பாண்டிபஜார் கிளை, திருவல்லிக்கேணி, சிங்காராசாரி தெருவில் செயல்பட்டு வரும் திருவல்லிக்கேணி கிளை, அசோக் நகர், 4 வது அவென்யூவில் செயல்பட்டு வரும் அசோக் நகர் கிளை, அண்ணா நகர், முதல் மெயின்ரோட்டில் செயல்பட்டு வரும் அண்ணா நகர் கிழக்கு கிளை, ஆதம்பாக்கம் செக்ரடேரியட் காலனியில் செயல்பட்டு வரும் ஆதம்பாக்கம் கிளை, பெரியார் நகர், கார்த்திகேயன் காலனியில் செயல்பட்டு வரும், பெரியார் நகர் கிளை, பிராட்வே, பிரகாசம் சாலையில் செயல்பட்டு வரும் மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் என 7 இடங்களில் நடைபெறவுள்ளது.

அதேபோல, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகளான திருப்பெரும்புதூர் காந்திரோட்டில் செயல்பட்டு வரும் திருப்பெரும்புதூர் கிளை, குன்றத்தூர், சடையாண்டீஸ்வரர் கோயில் தெருவில் செயல்பட்டு வரும் குன்றத்தூர் கிளை, செங்கல்பட்டு, ஜீ.எஸ்.டி. சாலையில் செயல்பட்டு வரும் செங்கல்பட்டு கிளை, திருப்போரூர் பழைய மாமல்லபுரம் சாலையில் செயல்பட்டு வரும் திருப்போரூர் கிளை, திருவள்ளூர், ஜெயா நகரில் செயல்பட்டு வரும் திருவள்ளூர் கிளை, கடம்பத்தூர் கடை வீதியில் செயல்பட்டு வரும் கடம்பத்தூர் கிளை, பூவிருந்தமல்லி நெடுஞ்சாலையில் செயல்பட்டு வரும் பூவிருந்தமல்லி கிளை, செங்குன்றம் பஜனை கோயில் தெருவில் செயல்பட்டு வரும் செங்குன்றம் கிளை, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் செயல்பட்டு வரும் மீஞ்சூர் கிளை, பொன்னேரி புதிய தேரடி சாலையில் செயல்பட்டு வரும் பொன்னேரி கிளை, கும்மிடிப்பூண்டி, காட்டுக் கொல்லைத் தெருவில் செயல்பட்டுவரும்கும்மிடிப்பூண்டி கிளை, ஊத்துக்கோட்டை பஜார் தெருவில் செயல்பட்டு வரும் ஊத்துக்கோட்டை கிளை என 12 இடங்களில் நடைபெறவுள்ளது.

இந்த சிறப்பு கடன் முகாம்களை சிறுவணிகர்கள் வங்கிக் கிளைகளை நேரில் அணுகியோ அல்லது உரிய ஆவணங்கள் மற்றும் விவரங்களை கூட்டுறவுத் துறையின் வலைதளத்தில் உள்ள இணையவழி விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தோ பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, உதயநத்தம் கிராமத்தைச் சேர்ந்த, இரவிச்சந்திரனின் மகள், உதயநத்தம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவி இர.அகல்யா அவர்கள் ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் நடைபெறும் Sqay National Championship போட்டியில் (04.01. 2024 – 06.01.2024) கலந்துகொள்வதை முன்னிட்டு, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் பயணச்செலவு தொகை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

புதுச்சேரி மாநிலத்தில்

# ஸ்விகி, சொமோட்டோ தொழிலாளர்களுக்கு நலவாரியம் அமைக்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வலியுறுத்தல்!

புதுவை, ஜன. 6 -

புதுவை மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



புதுச்சேரி மாநிலத்தில் கடந்த காலத்தைவிட வரி வசூல், ஜி.எஸ்.டி., வளர்ச்சி போன்ற காரணங்களால் தொழில் செய்வதற்கான சூழல் மேம்பட்டுள்ளதாக இந்திய தொழில் கூட்டமைப்பு புதுச்சேரி அரசுக்கு முழு ஆதரவு இருந்தும், திறமையான உழைக்கும் திறன் கொண்ட மனித வளம் இருந்தும், தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதில் என்.ஆர். காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி அரசு தோல்விகண்டுள்ளது.

தொழில் வளத்தை மேம்படுத்த சேதராப்பட்டில் 750 ஏக்கர் நிலம் இருந்தும் அங்கு மருந்து உற்பத்தி தொழிற்சாலைகள், தகவல் தொழிநுட்ப நிறுவனங்கள், ஜவுளி பூங்கா அமைப்பதற்கான எந்த முயற்சியும் இந்த அரசு எடுக்கவில்லை.

படித்த இளைஞர்களுக்கு தாராளமாக வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று ஆட்சியாளர்கள் வாய் சவடால் பேசினார்கள். இதற்கெல்லாம் மேலாக தொழில் முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி தொழில் முதலீட்டை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

**வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது!**

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரியில் வேலையில்லா திண்டாட்டம் பெருகியுள்ளது. இதனால் படித்த புதுச்சேரி இளைஞர்கள் அரசுப்பணி எட்டாக்கனி ஆகிவிட்டதாலும், படிப்புக்கேற்ற வேலை இல்லாததாலும் கிடைக்கும் வேலையை செய்து குறைந்த சம்பளத்தில் குடும்பம் நடத்தி வருகிறார்கள். இதனைக்கண்டு புதுச்சேரி அரசு வெட்கப் பட வேண்டும்.

அந்த வகையில் புதுச்சேரி மாநிலத்தில் ஸ்விகி, சொமோட்டோ உள்ளிட்ட இணையவழி ஆப்கள் மூலம் உணவு டெலிவரி சேவையிலும், ப்ளிப்கார்ட், அமேசான் உள்ளிட்டவை மூலமாக மளிகை மற்றும் இன்னும் பிற பொருட்களின் டெலிவரி செய்யும் பணியில் பகுதி நேரமாகவும், முழு நேரமாகவும் பல நூறு இளைஞர்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பணியாற்றி வருகிறார்கள். சுற்றுலாவை நம்பி இருக்கும் உணவு விடுதிகளின் பங்காளனாக செயல்படும் இந்த ஊழியர்களால் பல நூறு குடும்பங்களுக்கு குறித்த நேரத்தில் உணவு எடுத்துச் செல்லப்படுகிறது. இது நேரடியாகவும், மறைமுகமாகவும் புதுச்சேரியில் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காக அமைகிறது. சுற்றுலாப் பயணிகளும், வேலைக்கு செல்பவர்களும் இணைய வழி சேவையை பெரிதும் பயன் படுத்துகிறார்கள்.

**புதுச்சேரி அரசு மவுனம் காத்து வருகிறது!**

சுற்றுலாப் பயணிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு குறித்த நேரத்தில் டெலிவரி செய்ய வேண்டும் என்ற நோக்கில் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றும் அந்த ஊழியர்களுக்கு பணியிட பாதுகாப்போ, பணிநிரந்தரமோ கிடையாது. இரவுபகல் பாராது மக்கள் பசியைத் தீர்க்கும் இந்த ஊழியர்கள் உரிமை கேட்டு வீதியில் இறங்கிப் போராடும் சூழலும் அவ்வப்போது நிகழ்ந்து வருகிறது. இதன் காரணமாக முறைப்படுத்தப்பட்ட தொழிலாளர்களாக இவர்களை மாற்றி, தொழிலாளர் நலத்துறையின் அடிப்படை சலுகைகளையாவது வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தும் வருகின்றனர். ஆனால் வழக்கம் போல் புதுச்சேரி அரசு மவுனம் காத்து வருகிறது.

ஆனால் மக்கள் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஸ்விகி, சொமோட்டோ போன்ற இணையவழி செயலி மூலம் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நலவாரியம் அமைத்தும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்தும் அரசாணை வெளியிட்டுள்ளார். ராஜஸ்தான் மாநிலத்தில் நலவாரியம் அறிவிப்பு செய்திருந்தாலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் இணையம் சார்ந்த கிக் (GIG) தொழிலாளர்கள் நலவாரியம் (TAMIL NADU PLAT FORM BASED GIG WORKERS WELFARE BOARD) எனும் புதிய நலவாரியத்தை தோற்றுவித்து அவர்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றிய பெருமை எங்கள் திராவிட மாடல் அரசுக்கே உண்டு. இதன் மூலம் தொழிலாளர்களுக்கு சமூக, பொருளாதார ரீதியிலான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. நலவாரியத்தில் உறுப்பினராகச் சேரும் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், பணி சமயத்தில் இறந்தால் நிவாரண உதவி, திருமண உதவி தொகை, குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை, அரசு காப்பீடு திட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகளும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் பணியாற்றும் சுமார் ஒரு லட்சம் இணையவழி தொழிலாளர்கள் பயன்பெற முடியும்.

**பணி பாதுகாப்பை உறுதிச் செய்ய வேண்டும்!**

ஆனால் புதுச்சேரியில் படித்த இளைஞர்களுக்கு வேலை வழங்க இயலாத அரசாக என்.ஆர். காங்கிரஸ் - பா.ஜ.க. அரசு உள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழக அரசை தினம்தோறும் விமர்சனம் செய்து அரசியல் ஆதாயம் தேடும் துணைநிலை ஆளுநர் அவர்களும், அவருக்கு ஒத்தூதும் முதல்வர் ரங்கசாமி அவர்களும் பசிப்பிணியைப் போக்க படித்த படிப்பை ஓரம்கட்டிவிட்டு கவுரவமாக பணியாற்றும் ஸ்விகி, சொமோட்டோ உள்ளிட்ட இணையவழி சேவையில் ஈடுபட்டு இருக்கும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் நலன் காக்க அவர்களுக்கு தமிழக திராவிட மாடல் அரசைப் பின்பற்றி நலவாரியம் அமைத்து அவர்களின் பணி பாதுகாப்பை உறுதிச் செய்ய வேண்டும். அல்லது புதுச்சேரி அமைப்புசாரா தொழிற்சங்கத்தில் உள்ள 26 பிரிவு தொழிலாளர்களோடு இவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றியம், வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச. இளையச்சூரியன் முன்னிலையிலும் நடைபெற்ற குதிரை வண்டி பந்தயத்தை புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார், இந்நிகழ்வில் குன்றாண்டார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் கே.ஆர்.என்.போஸ், மாவட்டப் பொருளாளர் எம்.லியாகத் அலி, பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.செந்தில் குமார், குண்றாண்டார் கோவில் மத்திய ஒன்றிய செயலாளர் சி.சண்முகம், எம்.எம்.பாலு, சிவ.வீ.ஞானப்பிரகாசம், டாக்டர் கே.என்.அமானுல்லா, உஷா ராணி, எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மு. தம்பையா**

**சனவரி 6 (2023)**



கழகம் தொடங்கிய நாள் முதலே உறுப்பினராகி, கழகத்தின் சார்பில் மன்றம், படிப்பகம் தொடங்கி கழகக் கொள்கைகளை தனது பகுதியில் பரப்பியதோடு, அதில் இரவு பாடசாலை நடத்தியவர்.

பகுதிப் பிரதிநிதி, இரு முறை வட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்குப் பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் சைதை தொகுதியில் முதன்முதலாக சிலை வைத்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

வருகிற 7 மற்றும் 8 ஆம் தேதிகளில் - சென்னையில் நடைபெற உள்ள

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு!

## தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்!

**சென்னை, ஜன.6-**

**சென்னையில் வரும் 7 மற்றும் 8ஆம் தேதிகளில் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார்.**

2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு லட்சம் கோடி டாலர்களாக மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார். புதிய முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு முதலீட்டாளர்களுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில், ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கின் ஒரு பகுதியாக, வரும் 7 மற்றும் 8ம் தேதிகளில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது.

வெளிநாட்டு நிறுவனங்கள், உள்நாட்டு நிறுவனங்கள், மாணவர்கள், கண்காட்சி அமைப்பாளர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு தமிழ்நாடு அரசு தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்நிலையில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா, தொழில் துறை செயலாளர் அருண் ராய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு செழிக்க, தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு, முதலீட்டாளர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த வரலாறு காணாத கனமழையால் பாதிக்கப்பட்ட திருவைகுண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கால்வாய், கிளாக்குளம், தாதன்குளம், கருங்குளம், ஆழ்வார்கற்குளம் ஆகிய பகுதிகளை நேற்று முன்தினம் (04.01.2024) வியாழக்கிழமை, திமுக துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் சென்று பார்வையிட்டு, அப்பகுதி மக்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். உடன், சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர் இசக்கிபாண்டியன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்!

பா.ஜ.க. மிரட்டிப் பார்க்கிறது!

# அமலாக்கத்துறை சம்மன் சட்ட விரோதம்!

## டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜன. 6-

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால், அமலாக்கத்துறை மூலம் பா.ஜ.க. தன்னை மிரட்டுவதாக டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் குற்றச்சாட்டியுள்ளார். மதுபானக் கொள்கை மாற்ற வழக்கில் அமலாக்கத்துறை தனக்கு அனுப்பியுள்ள சம்மன் சட்டவிரோதமானது என்றும் அவர் புகார் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், டெல்லியில் மதுபானக் கொள்கை முறைகேட்டில் ஈடுபட்டதாக ஆட்சியாளர்கள் மீது குற்றம்சாட்டி, அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. ஆனால், இந்த குற்றச்சாட்டை ஆம் ஆத்மி அரசு திட்டவட்டமாக மறுத்து வருகிறது. இருப்பினும், துணை முதலமைச்சராக இருந்த மணிஷ் சிசோடியா மற்றும் அமைச்சராக இருந்த சஞ்சய் சிங் ஆகியோரை அமலாக்கத்துறை கைது செய்தது.

மேலும், இந்த வழக்கில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு அமலாக்கத்துறை 3 முறை சம்மன் அனுப்பியது. ஆனால், இது அரசியல் பழிவாங்கும் நோக்கோடு போடப்பட்டுள்ள வழக்கு என்று கூறி, கெஜ்ரிவால் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்து வருகிறார். இந்நிலையில், நேற்று முன்தினம் ஆஜராகுமாறு முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு 4வது முறையாக சம்மன் அனுப்பிவிட்டு, ஒருவேளை ஆஜராகாவிட்டால் அவரை கைது செய்ய அமலாக்கத்துறை திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் டெல்லியில் உள்ள கெஜ்ரிவால் வீட்டைச் சுற்றிலும் அதிகளவிலான போலீசார் குவிக்கப்பட்டுள்ளதால் அங்கு பரபரப்பு நிலவுகிறது.

இந்நிலையில், அரவிந்த் கெஜ்ரிவால் வெளியிட்டுள்ள வீடியோவில்,

அமலாக்கத்துறை மூலம் தம்மை பா.ஜ.க., மிரட்டுகிறது என்று குற்றம்சாட்டியுள்ளார். அமலாக்கத்துறையின் சம்மன் சட்டவிரோதமானவை, பொய்யானவை என்று தாம் தெரிவித்து வரும் நிலையில், அதற்கு உரிய விளக்கம் அளிக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால், அமலாக்கத்துறை மூலம் ஒன்றிய பா.ஜ.க., அரசு தம்மை மிரட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார். சி.பி.ஐ., அமலாக்கத்துறை மூலம் மிரட்டி என்னை கைது செய்ய பா.ஜ.க. முயற்சிக்கிறது என்று கூறிய அரவிந்த் கெஜ்ரிவால், பா.ஜ.க.,வினர் மீதான ஊழல் புகாரில் சி.பி.ஐ., அமலாக்கத்துறை ஏன் விசாரணை நடத்துவதில்லை? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மதுபானக் கொள்கையில் நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை என்று தெரிவித்துள்ள அவர், பா.ஜ.க.,வில் சேராதவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று விமர்சித்தார். நேர்மை மட்டுமே தம்முடைய சொத்து என்று கெஜ்ரிவால் தெரிவித்தார்.

மக்களவை தேர்தல் வியூகம் குறித்து

# காங்கிரஸ் கட்சியினர் டெல்லியில் ஆலோசனை!

## மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்!

புதுடெல்லி, ஜன. 6 -

மக்களவை தேர்தல் வியூகம் மற்றும் தேர்தல் பிரச்சார பணிகள் குறித்து காங்கிரஸ் கட்சியினர் டெல்லியில் ஆலோசனை நடத்தினர்.

மக்களவை தேர்தல் வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளை துரிதப்படுத்தியுள்ளன. இந்நிலையில், மக்களவை தேர்தல் வியூகம் மற்றும் தேர்தல் பிரச்சார பணிகள் குறித்து காங்கிரஸ் கட்சி நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியது.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் பொதுச் செயலாளர்கள், மாநிலப் பொறுப்பாளர்கள், மாநில தலைவர்கள், சட்டமன்ற கட்சி தலைவர்களின் கூட்டம் நேற்று டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவரும், எம்.பி.,யுமான ராகுல் காந்தி, பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்நிலையில், ராகுல் காந்தியின் பாரத் நியாயா நடைபயணம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கில் திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு!

# கழக அயலக அணி மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி தலைமை! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, ஜன. 6 -

கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

நமது நெஞ்சம் நிறைந்த கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் ஜனவரி 10 மாலை 3 மணி அளவில் ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா "சமூக நீதிப் போரில் திராவிட இயக்கம்" எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

கழக அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 10 புதன் கிழமை அன்று மாலை 5 மணி அளவில் ராயப்பேட்டை ஒய் எம் சி ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளுக்கு கழக அயலக அணி தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார் எம்.பி., வழக்கறிஞர். மனு சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள் சேலம் திருமதி. எஸ்.உமாராணி எம்.சி., விஜயன்.ராமகிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி., முத்துவேல்.ராமசாமி, சேகர்.ஜே.மனோகர், குமரி.எ.பாபு வின்பிரெட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இரண்டு நிகழ்வுகளிலும் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத்தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. கேட்டுக்கொண்டுள்ளார்.



புதுச்சேரி பள்ளி – கல்லூரிகளைச் சேர்ந்த 100 மாணவர்கள் மாநில தி.மு.க. அமைப்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா முன்னிலையில் தி.மு.க.–வில் இணைந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்

# ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகள்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை ஜன.6-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 04.01.2024 அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முடிவுற்ற பல்வேறு கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டு வருகிறது. அதன்படி அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கீழாநிலைக்கோட்டை, அய்யாக்கண்ணு அரசு மேல்நிலைப் பள்ளியில், நபார்டு வங்கி திட்டத்தின்கீழ் ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆறு வகுப்பறை மற்றும் இரண்டு அறிவியல் ஆய்வகக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பள்ளியில் அதிக அளவிலான மாணவ, மாணவிகள் பயில்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனை மாணவ, மாணவிகள் உரிய முறையில் பயன்படுத்தி கொண்டு கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்.

அதனைத்தொடர்ந்து, புதுநிலைவயல் ஊராட்சி, கீழாநிலைக்கோட்டை, அரியநாயகி அம்மன் கோயில் தெற்கு பகுதியில், மாநில நிதிக்குழு மான்யத் திட்டத்தின்கீழ் ரூ.9.66 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேவர் பிளாக் சாலை திறந்து வைத்து, அரியநாயகி அம்மன் திருக்கோயில் குளம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் பணிகளும் பார்வையிடப்பட்டது. மேலும் காரமங்கலம் ஊராட்சி, காயாம்பட்டியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கம் மற்றும் கும்மங்குடி ஊராட்சி, தெற்கு பொந்துப்புளியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடையினை திறந்து வைத்து, 23 நபர்களுக்கு ரூ.9 இலட்சம் மதிப்பிலான நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆணைகளும் வழங்கப்பட்டது. மேலும் மேல்நிலைவயல் ஊராட்சி, பூனையன் குடியிருப்பு பகுதியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி கட்டிடமும், கும்மங்குடி ஊராட்சி, தெற்கு பொந்துப்புளியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT), ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சாலையினையும் உள்ளிட்ட முடிவுற்ற கட்டிடப் பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலா முத்து, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன். இராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் எஸ். பாலகிருஷ்ணன், மாவட்ட கல்வி அலுவலர் (அறந்தாங்கி) ராஜேஸ்வரி, அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கலைவாணி சுப்பிரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிங்காரவேலன், சரவணராஜா, கூட்டுறவு சார்பதிவாளர் அன்னலட்சுமி, வட்டாட்சியர் (பொ) ஜெயபாரதி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜாகண்ணு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் காலமநல்லூர் ஊராட்சி சின்னமேடு மீனவ கிராமத்தில் ரூ.9.78கோடி மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் (மீன் ஏல கூடம்) மற்றும் கடலரிப்பை தடுக்கும் பணி நேர் கல் சுவர் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதையடுத்து சின்னமேடு மீனவ கிராமத்தில் நடைபெற்ற விழாவில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் சிறப்புரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அமிர்த.விஜயகுமார், எம்.அப்துல்மாலிக், பஞ்சுகுமார் தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழு தலைவர்கள் நந்தினிஸ்ரீதர், மகேந்திரன், ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் துளசிரேகாரமேஷ் மற்றும் பலர் உள்ளர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பூவாளூர் சின்னதுரை**
**சனவரி 6 (2014)**



**தந்தை பெரியாரிடம் அணுக்கமாக இருந்து பணியாற்றியவர், பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றவர், தொடக்கத்தில் நண்பராகவும், பின்னர் தலைவராகவும் கலைஞரை ஏற்றுச் செயல்பட்டவர்.**

**திராவிடர் கழகத்தில் இருந்தபோது இந்தித் திணிப்பை எதிர்த்து ஆறு முறை சிறை சென்றதையும் – தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் 12 முறை சிறை சென்றதையும் பெருமையாகக் கருதியவர்.**

**1998ஆம் ஆண்டு தி.மு.க. நடத்திய முப்பெரும் விழாவில் "பெரியார் விருது" வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# கலை உலகச் சூரியன் நீ!



சூரியனுக்குச் சூரியகாந்திப் பூவின் வணக்கம். சோழனுக்குப் பிசிராந்தையாரின் இதய முழக்கம். என் தாய் தன் கருவறையில் இருந்து என்னைக் கடற்றிப் போடும்போது, இந்தத் தமிழ்ப் பூமியைத் தான் அறிமுகப்படுத்தினாள். என் தந்தை தமிழில் யோசிக்கச் சொன்னான். என் ஆசிரியன் தமிழை வாசிக்க சொன்னான். ஆனால், தலைவன் நீயோ …தமிழில் சுவாசிக்க அல்லவா கற்றுக் கொடுத்தாய்!

நான் விழாதபடி மொழி ஊன்றுகோல் தந்துதூக்கி நிறுத்தியிருக்கிறாய்! 'நான் மேடை ஏற இனம், மொழியின் இரத்தத்தைச் சேமித்திருக்கிறாய்! நான் நோயாளியாக மரணப்படுக்கையில் இருந்தாலும், உன் புத்தகம்தான் எனக்குச் செவிலித் தாயாகச் சேவை புரிந்திருக்கிறது. எனக்கு மனசுக்குள் வேர்க்கும் போதெல்லாம், உன் இலக்கியங்கள் தாம் விசிறி கொடுத்திருக்கின்றன. என்னை அந்நிய மொழி அம்மணப்படுத்தும் போது, நீ செந்தமிழில் தந்த மொழி யாடையானது மானம் காத்துக் கொண்டிருக்கிறது!

உன்னை எவர் சந்தித்த போதும், உன் எழுதுகோலைக் களவாட முடியவில்லை ஏன்?" காரணம், அது கர்ணனின் குண்டலத்தைப் போலத் தவத்தால் கைப்பிடித்துப் பிறந்தவன். நாள்தோறும் அது தமிழுக்கு இலக்கியச் சிகிச்சை செய்து கொண்டிருந்தது. தமிழனுக்கு வேற்று மொழித் தாகம் ஏற்படா வண்ணம் நோய்த்தடுப்பு ஊசி போட்டுக் கொண்டிருந்தது! தமிழ்த் தாய்க்கு மானம் காக்கும் சேலை நெய்து, கலிங்கத்துப் பரணி அல்லவா பாடிக் கொண்டு இருந்தது?… ஒருவேளை உன் எழுதுகோல் செய்திகள் தரும் வேலை நிறுத்தம் செய்திடுமானால்,… நாட்டின் பத்திரிகைகளெல்லாம், 'மாங்கல்யம் இழந்த கைம்பெண்கள் ஆகிவிட்டிருக்கும்! கருத்துப் பசி எடுத்துக் கதறல் ஒலியால் ஒப்பாரிக் காவியங்கள் பாடியும் வைத்திருக்கும்!

நீ இலக்கியங்களில் நல்லறங் காண எழுத்தாணியோடு இல்லறம் நடத்தியவன். உன் பேனா ஆள வந்தார்களுக்கு. என்றுமே தலை குனிந்ததுமில்லை. வெண்சாமரம் வீசி வீழ்ந்ததுமில்லை!. சமுதாயச் சண்டை மூண்ட போதெல்லாம், சமாதானம் செய்யும் சாக்ரடிசாகச் சண்டமாருதம் கொட்டி இருக்கிறாய். அந்நாட்களில் ஏகாதிபத்திய சர்க்காரை உனது எழுத்தூசியானது இடுப்பொடித்து எதிரிகளுக்கே இனிப்பு வழங்கி உள்ளது. உன் வரலாற்றுப் புதினங்கள், தொலைந்து போன தமிழ்ச் சரித்திரங்களைத் தோண்டிக் கீழடி நாகரிகத்தையே அடையாளப்படுத்தியுள்ளன, அவை பொன்னோர் புவனத்தின் புதையலாக அல்லவா பேசப்படுகின்றன!. கால தேவனால் உறங்கிக் கொண்டிருந்த அவர்களை, நாயகன் நாயகியர்களாக உயிரூட்டித் தழுவி உலாத் தேர் ஏறிவரச் செய்திருக்கிறாய்!, நட்டுவம் போல் நடமாட விட்டு நாதக் கச்சேரி நடத்தி இருக்கின்றாய்!

உன் நாடகங்கள், நாடக அரசியல்வாதிகளுக்கெல்லாம் சவுக்கடி கொடுத்திருக்கின்றன! நீ அண்ணா அறிவாலயம் வருவதை நிறுத்தியிருந்தால், ஆரியம் உனக்குப் பொற்கோவில் கட்டிக் கும்பிட்டிருக்கும்! 'நீ பேசாமல் இருந்தால் போதும்….. மதவாதிகள் உன்னைப் பொன் பல்லக்கில் உட்கார வைத்துப் பூமாரிப் பொழிந்து, உலா வந்திருப்பார்கள்!. ஆனால், நீயோ சூரியனுக்கும் சூரியன் அல்லவா? நீ மகுடங்களுக்கு மரியாதை தந்தவன் அல்லன்!. மனித தத்துவங்களுக்கும் மகுடம் சூட்டி இருக்கிறாய்.

தமிழே! தலைவா! உன்னை ஆராதிக்கிறேன்! தலைவனே, உன்னைப் படித்தவன் தமிழன் ஆகிறான்! உன்னை உணர்ந்தவன் ஞானி ஆகிறான்! உன்னை முற்றிலும் அறியாதவன் முட்டாள் ஆகிறான்!… உன் உழைப்பை பார்த்தவன் தியாகி ஆகிறான்…..நீ காலத்தால் இற்று விழாதவன்!. வரலாற்றால் முற்றுப்பெறாதவன்! நீ தமிழ் நேற்று!. தமிழர்களின் எஞ்சிய சொத்து! நீ பெரியாரின் வாரிசு என்பதால், நீ அண்ணாவின் தம்பி என்பதால் உன் வெற்றிடத்தை எவராலும் நிரப்ப முடியாது!…

கலை உலகச் சூரியனே! எங்கள் உயிரின் உயிரே! உன் எழுதுகோலில் அப்படி என்ன அதிசயத்தை அடைத்து வைத்திருந்தாய்!. உனது எழுதுகோலானது விரல் பல்லக்கில் ஏறி நடனம் ஆடிய போது, இலக்கிய அருவி அல்லவா கொட்டுகிறது! சூறாவளி சுழன்றடிக்கிறது!. இனிய தென்றல் குளிர்ச் சுகமாய்த் தீண்டுகிறது! எரிமலை சினமாய் வெடிக்கிறது; பூகம்பம் பூவாய்ப் பூக்கிறது! சிலர் எழுது கோலில் மையை ஊற்றி எழுதுகின்றனர்; சிலர் பொய்யை ஊற்றி எழுதுகின்றனர்; ஆனால், நீயோ சமூக நீதிக்காக உண்மை எனும் குருதியை அல்லவா ஊற்றி எழுதிக் கொண்டிருந்தாய்…!

உன் பொன் விரல்கள் தீண்டும் போது தான் எழுதுகோலுக்குப் பிரசவ வலி ஏற்படுத்தியது. நீயோ எழுத்துக்களின் உச்சியில் நின்றவன். உன் நாடகங்கள் நாட்டின் நலிவை நீக்கி இருக்கின்றன. அவை சமுதாய அவல அழுக்குகளைத் துவைத்துக் காயப் போட்டு இருக்கின்றன!. உனது எரிமலை எழுத்தில் பனி மலைகளும் சேர்ந்து குளித்து இருக்கின்றன! உன் காதல் மொழி கேட்டுச் சூரியனுக்கும் குளிரெடுத்து, அவ்வப்போது மேகப் போர்வையைப் போர்த்திக் கொண்டான்.

ஆன்மீகத்தையும், ஆத்மாவையும் பேசிக் கொண்டிருந்த திரை உலகில், நீ நுழைந்தபோதுதான் பகுத்தறிவுக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கிற்று! உன்னால் தான் திரைக் கொட்டகைகளில் சமூக நீதிப் பிரச்சாரமே தொடங்கி வைக்கப்பட்டது! மூடக் கொள்கைகள் பூத்துக் கிடந்த சமுதாயக் சாக்கடைகளை உனது எழுதுகோல் ஒன்றே வடிகாலாக ஆக்கி தந்தது!. அநீதி தோய்ந்திருந்த நாட்டின் குறுக்குச் சுவர்களைப் பெயர்த்தெறிந்தது! உனது மை ஊற்றுக்கோல் பெண்மைக்குக் கிரீடம் ஏற்றியதால், பெருமை சேர்த்துப் பெரியாரைப் பேச வைத்தது!

ஒளியற்று இருண்டு கிடந்த கல்விக்குக் கண் வழங்கியது. சனாதனச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த சமுதாயத்தின் அடிமைத் தளையை அறுத்தெறிந்தது! 'சாதி, சமயத்தின் சல்லி, ஆணி வேர்களைக் கெல்லி எறிந்தது. காடுகளிலும், கழனிகளிலும் சந்தனச் சேறு பூசி உழைத்துக் கொண்டிருந்தவன்; புழுதி படிந்த தலைகளோடு ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவன்; அழுக்கேறிய தழும்புகளோடு மூட்டை முடிச்சுகளைச் சுமப்பவன்; வண்டியிழுப்பவன்; ஆலைகளில் அடி நாக்கு வறள வியர்வை சிந்துபவன் ஆகியோரது…. நெஞ்சங்களை உனது எழுதுகோல் அறுவடை செய்து கொண்டிருந்தது! ஏன்? உட்பரிகையில் படுத்து உல்லாசம் கண்டவனுக்கும் உணர்ச்சி ஊசி போட்டு, உசுப்பி விட்டு விழிக்க வைத்திருக்கிறது.

உனது எழுதுகோல் ஒன்றுதான் அண்ணாவிற்குப் பிறகு, கோயில்களைத் தவறாகப் பயன்படுத்தும் கொள்ளையர்களைச் சுட்டிக்காட்டியது: களவு செய்பவனின் கைகளில் விலங்கு மாட்டியது! அது மட்டுமல்ல; குறட்டை விட்டுக் கொண்டிருந்த கோட்டைக் கொத்தளங்களுக்குச் சிறைச் சாலைக் கதவுகள் திறக்கவும் வேலை கொடுத்தது. இளைத்துக் கிடந்த இனத்திற்கு உனது எழுத்தூசி தான் சத்துணவு வழங்கியது! பெரியாரின் கசப்பு மருந்துகளையும், அண்ணாவின் இனிப்பு மாத்திரைகளையும் சேர்த்துக் சரியான கலவை ஆக்கித் தந்த சுயம்பு நீ! நாட்டில் மண்டி கிடந்த இருட்டடிப்பு ஒட்டடைகளை நீக்கிய உனது தூரிகை தான்; பகுத்தறிவு வெள்ளையடிக்கத் தொடங்கிற்று!.

கிராமப்புறத்தின் கண்களையும், காதுகளையும் திரையரங்கங்கள் பக்கம் திருப்பி விட்டவன் நீ! கிராமத்துக் கீற்றுக் கொட்டைகளில் கிழித்துத் தைத்த வெண்திரையில், உனது பெயர் பளிச்சிடும் போதெல்லாம்….. மானிடக் கரங்களுக்குச் சுகவலி ஏற்பட்டது! நீ தீட்டிய திரை வசனங்களை மனிதச் சாதி மந்திரமாகவே கருதி மனனம் செய்தது! உனது பேனா கக்கிய வார்த்தை நளினங்களை உச்சரித்தவர்கள் தாம் திரைக் காவியங்களுக்காகத் தேர்வு செய்யப்பட்டனர்; உனது உரையாடல்கள் நடிகர் நங்கையர்களுக்கு நுழைவுத் தேர்வுப் பாடமாகவே வைக்கப்பட்டன!'

நீ திரைப்பட உலகின் சகாப்தம்! உனது திரைச் சிம்மாசனத்தில் எவரும் மாமன்னராக முடி சூட்டிக் கொள்ள இயலாது. நீ கலை உலகில் சிரஞ்சீவி! இராஜகுமாரியும், அபிமன்யும் உனது ஆற்றலை ஆதவன் போல் அடையாளம் காட்டின! பராசக்தியும், மனோகராவும், மலைக்கள்ளனும், புதுமைப்பித்தனும், திரும்பிப் பாரும், அரசிளம் குமரியும், அவன் பித்தனாவும், பூம்புகாரும், மறக்க முடியுமாவும், பாலைவன ரோஜாக்களும், நீதிக்குத் தண்டனையும், பாசப் பறவைகளும்,… இப்படியான 75 திரை ஓவியங்களைத் தந்து கலைத்துறைக்குத் தாய்ப்பாலின் அடர்த்தியாக மறைத் தீர்ப்பு வழங்கியவன்! இன்னும் அவை திரை உலகத்தின் வரலாற்றுக் காவியங்களாக வலம் வருகின்றன!

உன் சூரிய விரல்கள் செதுக்கிய உளியின் ஓசை இன்னும் சிரபுஞ்சி மழையாக இலக்கியம் படைத்து இருக்கிறது! பொன்னர் சங்கரின் மின்னல் வரிவாளிலும் உன் எழுத்துகள் கூர்மைப் பாய்ச்சுகின்றன! உன் ஒவ்வொரு திரைப்பட வருகையின் போதும், சிவப்புக் கம்பளம் விரித்துப் பட்டமளிப்பு விழா கொண்டாடிற்று. நீ தீட்டிய உரையாடல்களை உச்சரித்த பல நடிகர்களின் விலாசமும் விருதுகளும் பெற்றன! இயக்குநர்களோ மகுடம் சூட்டப்பட்டு மேடை ஏறினர்!

திரைப்பட உலகில் ஒரு புரட்சி நடிகரையும், ஒரு நடிகர் திலகத்தையும் கருவாக்கி தருவாக எழுந்து நின்றிட நியாய சபைகளைத் திறந்தவனும் நீ; உனது எழுத்து உரங்களால் அறிமுகப்படுத்திய அற்புதமான சாதனைப் படைப்பாளனும் நீ! இரவிவர்மாவின் தூரிகையாக மாறிய உனது கல்வெட்டு எழுத்துக்கள் தரம் பொன்னோவியமாக்கிப் பல திரைப்படங்களைச் சீதனமாகத் தந்திருக்கின்றன! அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி பாசுரங்களைப் போல, அடுக்கு மொழிகளால் ஆர்வலர்களை ஆட்கொண்டவன் நீ! அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், சேக்கிழார் போன்றோர் வலம் வந்த திரைச்சீலையில், நீ புகுந்த பின்தான், தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும், பகுத்தறிவுவாதிகளின் முழக்கங்களும் உன் திரைப்பட இராஜபாட்டையில் ஊர்வலம் வந்தனர்! உனது உரை வளத்தைக் கேட்டுக் கேட்டு உணர்ச்சிப் பெற்ற இளைஞர்க் கூட்டமோ, தமிழக வரலாற்றில் எழுச்சி கொண்ட ஒரு மொழிப் படையெடுப்பின் வரலாற்றை நடத்திக் காட்டிற்று!

இலக்கியங்களில் சிங்காரம் குலையாத திருக்குவளை மலர்ந்த சீர்திருத்தக் காரணி நீ! உனது எழுத்துப் போதையில் சொக்கிப் போன சூரியன், இரவு நேர ஆட்டங்களை வேவு பார்க்கத் தனது குடும்ப நிலாவையும் நட்சத்திரக் கூட்டங்களையும் திரையரங்குகளுக்கு அனுப்பி அன்றாடம் ஒற்றர் வேலை செய்து கொண்டிருந்தான்! உனது சாவாச் சரித்திரத்தை எந்த எழுது கோலாலும் திருத்த முடியாது! எதிரிக் கூட்ட எட்டப்பத் திருடர்களாலும் திருடவும் முடியாது! நீ சாதாரணமானவர்களையும் சரித்திரம் ஆக்கிக் காட்டியவன்! நீ ஊமையர்களைப் பேச வைக்க உதடுகள் நெய்தவன்!, நீ செவிடர்களுக்குச் செவிப்பறை சமைத்தவன்! உழைத்து, உழைத்து உருக்குலைந்து கிடந்த கிராமங்களுக்கு உனது கீர்த்திமிகு வசனங்களால் சீர்த்தி படைத்த பிரம்மா!

நீ மரணப் படுக்கையில் இருந்த வேளையிலும், அரசியல் அரங்கங்களை அரவணைத்தது போல, திரைத் துறையைக் கை விடாதவன்! நீ என்றும் எழுத்துக்களை கொண்டாடத் தவறியதில்லை. இரயில் பயண வேளையிலும், சிறைக் கொட்டடியில் கிடந்த போதும், உன் எழுத்துச் சிறகுகள் சிகரங்களை தொட்டுப் பேசிக் கொண்டே இருந்தன. நீ கந்தக எழுத்துக்களையும், கற்பித்தவன்; கவிகுலுங்கும் கனிச்சாற்றையும் மொண்டு மொண்டு பருகத் தந்தவன்! உன் கலை உலகச் சிம்மாசனத்தை எவராலும் பறிக்கவும் முடியாது! பார் இயங்கும் வரை, பரிதி சுழலும் வரை எத்தனை அறிவியல் வந்தாலும், ஆர்ப்பரிக்கும் அலைகடல் பொங்கி மாற்றங்கள் நிகழ்ந்தாலும், சிகரம் தொட்ட உனது இமய இடத்தைப் பங்குப் போட முடியாது! உன் கலைப்பணிக்குப் பகுத்தறிவுச் சிங்கம் பட்டுக்கோட்டை அழகிரியால் வழங்கிய அஞ்சுக மொழிஅல்லவா… கலைஞர்! அதனை உன்னைத் தவிர, யாராலும் அடைமொழியாக அடைய இயலாது.

அது ஒவ்வொரு தமிழனின் ஊனிலும், உயிரிலும் உறைந்து விட்ட நடைமொழி! காலக் கடலில் கரைந்து விடாத எங்களின் கலை உலகின் காவிய நாயகனே! நீ கலையைக் காதலிக்கத் தெரிந்தவன்.. கலைக் காதலியால் என்றும் கைவிடப்படாத காதலன் நீ! கலை உலகச் சூரியனே! நீ வாழ்க! வாழ்க!..



**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக் குழுத்தலைவர்




சென்னை, தீவுத்திடலில் 48 – வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023 – 2024 நடைபெற உள்ளதையொட்டி அரசுத் துறைகளின் அரங்கங்கள் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### மயிலாடுதுறையை பாதிக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அரசிதழில் வெளியீடு!

## மாவட்ட மக்களுக்கு முதல்வர் தந்த மதிப்புமிக்க பொங்கல் பரிசு!

### கழக விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெகவீரபாண்டியன் நன்றி தெரிவித்து அறிக்கை!

மயிலாடுதுறை, ஜன. 6-

மயிலாடுதுறையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அரசிதழில் வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.கழக விவசாயத் தொழிலாளர் அணி மாநில இணை செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெக வீரபாண்டியன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சோழமண்டலத்தில் மயிலாடுதுறை மாவட்டம் எத்தனையோ மகத்துவங்களை பெற்றிருக்கிறது. அரசியல், ஆன்மீகம், கல்வி, வரலாற்று முக்கியத்துவம் இப்படி எந்த கண்ணோட்டத்தில் பார்த்தாலும் மயிலாடுதுறை மாவட்டம் தமிழகத்தில் தனித்து அடையாளப்படுத்தப்படும்.

இவை எல்லாவற்றிலும் கூடுதல் சிறப்பு இதன் மாறாத பசுமை. நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடி செழிப்போடு விளங்க செய்திடும் காவிரி, இங்குதான் கலைஞரால் மதிப்பு கூட்டப்பட்ட பூம்புகாரில் (காவிரிபூம்பட்டினத்தில்) மகிழ்வோடு வங்கக்கடலில் சங்கமிக்கிறது.

இது நிலைக்கப்பட வேண்டுமேயானால், இம்மாவட்டம் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்று அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். அதை முதல்வர் அவர்கள் உறுதிப்படுத்தும் விதமாக சென்ற கூட்டத் தொடரில் மசோதாவை நிறைவேற்றினார்.

இன்று தமிழக அரசின் அரசு இதழில் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதை தமிழக அரசின் சட்டத்துறை செயலாளர் ஜார்ஜ் அலெக்சாண்டர் அவர்கள் அதற்கான தமிழக ஆளுநர் ஒப்புதலை பெற்று அந்த நல்ல அறிவிப்பை அறிவித்துள்ளார்.

தமிழக விவசாயிகள் மீதும் விவசாயத் தொழிலாளர்கள் மீதும் அதிக அக்கறை கொண்டுள்ள திராவிட மாடல் அரசின் முதல்வர், மயிலாடுதுறை மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின் வயிற்றில் பாலை வார்த்துள்ளார்.

விவசாயிகள் மட்டற்ற மகிழ்ச்சியில் உள்ளனர். தன்னுடைய விளை நிலங்கள் எதிர்காலத்தில் எந்த பாதிப்புகளுக்கும் உள்ளாகாமல் பாதுகாக்கப்படும் என்று நம்பிக் கையோடு உள்ளார்கள்.

இவ்வாறு கழக விவசாயத் தொழிலாளர் அணி மாநில இணை செயலாளர், ஜெகவீர பாண்டியன் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினருமான ரெ. தங்கத்திடம், ஆர்.சீனிவாசன் என்ற மாற்றுத்திறனாளி தமக்கு சுயதொழில் செய்ய உதவிடுமாறு வைத்த கோரிக்கையை ஏற்று, அவருக்கு சங்கம் சார்பில் புதிய ஆட்டோ ரிக்ஷாவை வழங்கி ரெ.தங்கம் ஊக்கப்படுத்தினார். மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், சங்க மக்கள் தொடர்பு அலுவலர் தி.நகர் லயன் பா.சக்திவேல், வீர.சரவணன், தென்சென்னை மாவட்ட சங்க செயலாளர் கி.பத்மநாபன், வடசென்னை மாவட்ட சங்க செயலாளர் எஸ்.தர்மலிங்கம், துணை செயலாளர் எஸ்.ஸ்டீபன், மகளிர் அணி நிர்வாகிகள் டி.குமாரி, எஸ்.பச்சையம்மாள், கே.சித்ரா, எஸ்.தேவி ஆகியோர் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை புகாரி
### சனவரி 6 (1999)



**கழகத்தின் தொடக்க நாள் முதலாக அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டுதலையேற்று, தி.மு.க.வின் கொள்கையில் உறுதி கொண்டு, தமிழ்நாட்டின் ஊர்கள்தோறும் கழக மேடைகளில் கொள்கை பரப்பும் முழக்கம் செய்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகத்தின் அறப்போராட்டங்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சிறை சென்றது மட்டுமின்றி, மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.**

**"சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள் பெரும்பான்மையினருடன் இணக்கமாக வாழ்வதற்கான வழிகாண்பது தி.மு.கழகம்" என்பதில் உறுதி பூண்டு அயராது பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சென்னையில் இம்மாதம் 7ஆம் தேதி தொடங்கவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) காவல்துறை சார்பில் 18 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 62 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள், திருநெல்வேலி மாநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படைகளுக்கு 2 ஒருங்கிணைந்த நிர்வாகக் கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மை செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா.விசுவநாதன், ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு சந்தித்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 கோடியே 6 இலட்சத்து 27 ஆயிரத்து 472 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்திரகாந்த் காம்ளே, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்/ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் ச. விஜயகுமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், நிர்வாக இயக்குநர் ஹனிஷ் சப்ரா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ். சிவராசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் செயலாளர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் – தாம்பரம் சானடோரியம், ஹோம் சாலையில் 18 கோடி ரூபாய் செலவில் 461 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே. அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், கடலோரக் காவல் படை கிழக்கு மண்டல தளபதி தலைமை ஆய்வாளர் டோனி மைக்கேல் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் க.நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### ஒன்றிய அமைச்சர் ஆதாரமற்ற குற்றச்சாட்டு!

# அனைத்துப் பணிகளும் முடிந்த பின்னரே கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் திறக்கப்பட்டது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கம்!

சென்னை, ஜன. 6-

அனைத்து பணிகளும் முடிவடைந்த பின்னரே கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் திறக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார். ஒன்றிய இணையமைச்சர் முருகன் ஆதாரமற்ற பொய் குற்றச்சாட்டுக்களை தெரிவித்து வருவதற்கும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பாக்கத்தில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை கடந்த சனிக்கிழமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் இருந்து தென்மாவட்டங்களுக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பேருந்து முனையத்தின் செயல்பாடுகளை அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவருமான சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்.

பேருந்து நிலையத்தில் மேற்கொள்ள உள்ள பணிகள் குறித்து அதிகாரிகளிடமும், வசதிகள் குறித்து பயணிகளிடமும் அவர் கேட்டறிந்தார். தொடர்ந்து மக்கள் உதவி மையத்தில் உள்ள அதிகாரிகளிடம் பயணிகள் கேட்கும் கேள்விக்கு உரிய முறையில் பதில் அளிக்க வேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது நகராட்சி நிர்வாகத்துறை செயலாளர் சமய மூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் அன்ஷுல் மிஸ்ரா, தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அமல் ராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் இருந்தனர். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சேகர்பாபு, கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 30 சதவீத பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டு இருந்ததாகவும், தி.மு.க ஆட்சி அமைந்த பின்னர் முறையாக திட்டமிட்டு பணிகள் முடிக்கப்பட்டு பேருந்து நிலையம் திறக்க ப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### ரூ.6.74 கோடி செலவில்

# கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் அதிநவீன ஆய்வகம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 6 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (04.01.2024) சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் ரூ.6.74 கோடி மதிப்பீட்டில் அதிநவீன இருதய கேத்லேப் (Cath lab) ஆய்வகத்தினை தொடங்கி வைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது;

**அதிநவீன கேத்லேப் ஆய்கம்!**

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை 15.06.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திறந்து வைக்கப்பட்ட பின்னர் பல்வேறு உட்கட்டமைப்புகள், மருத்துவ உபகரணங்கள், மருத்துவ சேவைகள் மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது. சென்னை மக்களுக்கு மட்டுமல்லாது பிற மாவட்ட மக்களுக்கும் இந்த மருத்துவமனை சிறந்த மருத்துவ சேவையை வழங்கி வருகிறது.

இன்று ரூ.6.74 கோடி செலவில் இங்கு அதிநவீன கேத்லேப் ஆய்வகம் தொடங்கி வைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் ஆஞ்சியோகிராம், ஸ்டன்ட், பிறவி குறைபாடு உள்ள இருதய ஓட்டைகள் அடைப்பது, பேஸ்மேக்கர் பொருத்துவது, இருதய வால்வுகள் சரிசெய்வது போன்ற சிகிச்சைகள் இந்த மருத்துவமனையிலேயே மேற்கொள்ள முடியும். சென்னையில் பல்வேறு பெரிய அரசு மருத்துவமனைகள் இருந்தாலும், இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனை, மற்றும் கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய 4 மருத்துவமனைகளில் மட்டுமே இந்த கேத்லேப் வசதி உள்ளது. தற்போது கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையிலும் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால், தென் சென்னை மற்றும் வட சென்னை மக்களும் பயனடைவார்கள். இதுவரை தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 24 கேத்லேப் உள்ளது, இன்று 25 ஆவது கேத்லேப் கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்டது. மேலும், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விரைவில் கேத்லேப் ஆய்வகம் அமைக்கப் படவுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கேத்லேப் ஆய்வகம் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார்கள். அதன்படி படிப்படியாக இந்த பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 3 புதிய கேத்லேப் கருவிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 4 இடங்களில் புதிய கேத்லேப் கருவிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதிநவீன தொழில்நுட்ப கருவிகளை பொறுத்தவரை, PET CT என்ற புற்றுநோய் கண்டறியும் கருவி இதற்கு முன்னர் சென்னை, இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனை ஆகிய 2 இடங்களில் மட்டுமே இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, திருநெல்வேலி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம் ஆகிய 4 இடங்களில் PET CT மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பெரிய அளவிலான அச்சத்தை மாரடைப்பு மற்றும் இருதய கோளாறுகள் ஏற்படுத்தி வரும் சூழலில் மருத்துவத் துறையில் நவீன உபகரணங்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில். கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் இன்று அதிநவீன கேத்லேப் ஆய்வகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

### ஜன. 6ல் சென்னை மாரத்தான் ஓட்டம்:

## மெட்ரோ ரயிலில் இலவசப் பயணம்!

சென்னை, ஜன.6-

சென்னை மாரத்தான் ஓட்டம் வருகின்ற ஜன. 6 ஆம் தேதி (சனிக்கிழமை) அன்று அதிகாலை 4 மணி முதல் நடைபெறுகிறது. இதனையொட்டி மாரத்தான் பங்கேற்பாளர்கள் பயன்பெறும் வகையில் மற்றும் அவர்களுக்கு இடையூறு அற்ற எளிமையான பயண அனுபவத்தை வழங்கும் வகையில், சென்னை மெட்ரோ ரயில் சேவைகள், வருகின்ற (06.01.2024) அன்று அதிகாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை 15 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

மாரத்தான் பங்கேற்பாளர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், சென்னை ரன்னர்ஸ் உடன் இணைந்து, மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சிறப்பு க்யூஆர் குறியீடு பதியப்பட்ட பயணஅட்டையை பயன்படுத்தி 06.01.2024 அன்று மட்டும் மெட்ரோ ரயிலில் எவ்வித கட்டணமும் இன்றி பயணம் செய்து கொள்ளலாம் மற்றும் இந்த க்யூஆர் குறியீடை பயன்படுத்தி பங்கேற்பாளர்களுக்கு அன்று மட்டும் வாகன நிறுத்துமிடத்தில் தங்களது வாகனங்களை இலவசமாக நிறுத்திக் கொள்ளலாம்.

வழக்கமான மெட்ரோ இரயில் சேவைகள் காலை 5.00 மணி முதல் இயக்கப்படும். மாரத்தான் பங்கேற்பாளர்கள் முழுமையாக இந்த வசதியை பயன்படுத்தி கொள்ளுமாறு சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.


47வது சென்னைப் புத்தகக் காட்சி

“கலைஞர் கருவூலம்”

விற்பனைக் கூடத்தில்

தலைமைக் கழக வெளியீடுகள்

47வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 ஜனவரி 3 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.

புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 378ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

# உடன்பிறப்பே... 39

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த வி.எம்.தேவராஜ் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## வி.எம்.தேவராஜ்: படை முகத்துப் பெருவீரன்!



ஓவியம் : ரவி பேலட்

**கோ**ட்டை நகரமாம் வேலூரரை சிப்பாய்க் கலகப் புரட்சியின் மையமாக வரலாறு குறித்து வைத்துள்ளது. அதேபோல சுதந்திரத்துக்குப் பிந்தைய ஜனநாயக ஆட்சியில், வேலூர் மண்டலம் 'தி.மு.கழகத்தின் கோட்டை' என்பதையும் வரலாறு எழுதுகிறது.

தமிழ்நாட்டில் முதன்முதலில் ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு முன்னர் அண்ணா தொடங்கி வைத்த போர்முழக்கம் 'இன்று வேலூர் கோட்டை, நாளை செயின்ட் ஜார்ஜ் கோட்டை' என்றுதான். அந்தப் பொதுக்கூட்டம், வேலூர் கோட்டை மைதானத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கழகத்தின் முழக்கத்தை கர்ஜனை செய்த வேலூர் கழகச் சிப்பாய்களில் ஒருவர் வி.எம். தேவராஜ். கலைஞரின் சொற்களிலேயே சொல்வதெனில் 'படை முகத்துப் பெருவீரன்' வி.எம்.தேவராஜ்.

### தோழமையான அணுகுமுறை

வேலூர் வட்டாரத்துப் பிரச்சினை என்றாலோ, நிகழ்ச்சி என்றாலோ, 'சாரதியையும் தேவராஜனையும் கேளுங்கள்' என்று அண்ணா அவர்கள் அந்த இருவரையும் தனது தளகர்த்தர்களாக அடையாளம் காட்டினார். சற்றேறக்குறைய பேரறிஞர் அண்ணா பிறந்து 11 ஆண்டுகளுக்குப் பின்னால், 1920 ஆம் ஆண்டு ஜூன் 7 ஆம் தேதி பிறந்தவர். எனினும், அண்ணாவுக்கும், தேவராஜ் அவர்களுக்கும் தோழமையான அணுகுமுறை நிலவியதை காலம் குறித்து வைத்திருக்கிறது.

தொடக்கக் கால பள்ளிக்கல்வியுடன் திராவிட இயக்கத்தின் அரசியலும் சேர்ந்து கொண்டதால், தேவராஜ் வேலூர் வட்டாரத்தில் திராவிடக் கொள்கைகளைப் பேசும் தளபதியாக அறியப்படலானார். தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்றுப் பெரும் படை திரண்ட போது, அதில் வேலூரின் முகமாக சாரதியும் தேவராஜூம் இருந்தனர். கழகத்தவரை அரவணைப்பதில் சாரதியிடம் ஒரு பண்பு என்றால், அவரைப் போலவே தேவராஜூம் வேலூர் கழகத்தில் அன்பு பாராட்டியவர். ஆஜானுபாகுவான தோற்றம் என்றாலும் அமைதி, எளிமை, நிதானமான அணுகுமுறையே அவரின் அடையாளம் என வேலூர் கழகத்தினர் நினைவு கூர்கின்றனர். பேரறிஞர் அண்ணா தேவராஜை சுருக்கமாகத் 'தேவ் ! தேவ் !' என்று அழைப்பார் என்கிறார்கள். கிட்டத்தட்ட வேலூர் சுற்றுவட்டாரங்களில் கழக உடன்பிறப்புகளாலும், வேலூர் மக்களாலும் 'தேவ்' என்று அவர் அழைக்கப்பட்டார்.

### தி.மு.க.வின் கோட்டை

தி.மு.க.வின் கோட்டையாக இருந்த வேலூரில் இருந்து தொடர்ச்சியாக சாரதி வெற்றி பெற்றார் என்றால், அவருக்குப் பின்னர் தேவராஜ் அந்த செல்வாக்கைத் தக்க வைத்தவராகத் திகழ்ந்தார். சுமார் 36 ஆண்டுகள் வேலூர் நகர்மன்ற உறுப்பினராக தேவராஜ் இருந்தார். தவிர, சாரதிக்குப் பின்னர் நகர மன்றத் தலைவராகவும் ஒருமுறை செயல்பட்டவர்.

இவர் நகர மன்றத் தலைவராக இருந்தபோது, 'நகர மன்ற அலுவலகத்தில் அவர் இருக்கிறாரா இல்லையா என்பதை அவரது குடை சொல்லிவிடும்' என்பார்கள். எளிமையாக ஆட்டோவில் தான் வருவார்.சமயங்களில் மக்களோடு மக்களாகக் கையில் குடை பிடித்துக் கொண்டு சாதாரணமாக நடந்து செல்வதைப் பார்க்கலாம். அந்தக் குடையை அலுவலக வாசலில் மாட்டிவிட்டு அவர் வேலை பார்த்துக் கொண்டிருப்பார். அந்தக் குடை அங்கு இருந்தால், மக்கள் கூட்டமும் குறைகளுடன் அங்கு குழுமிவிடும்.

நகர மன்றத் தலைவர் பொறுப்புக்குப் பின்னர், 1980, 1984, 1989 ஆம் ஆண்டுகளில் வேலூர் கோட்டையில் இருந்து, செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குத் தேர்வாகி வந்து கலைஞரின் கரங்களை வலுப்படுத்தியவர் தேவராஜ்.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர், கலைஞரின் தலைமையை ஏற்றதும், கழகத்தைக் கட்டுக்கோப்பாக வைக்கவும் தேவராஜ் போன்றவர்கள் கடைசிவரை கலைஞருக்குத் துணை நின்றனர். 1972 ஆம் ஆண்டில் கழகம் உட்கட்சி நெருக்கடியைச் சந்தித்தபோது தேவராஜன் 'சாய்ந்து' விடுவார் என்று ஒரு பரபரப்பு கிளப்பப்பட்டது.

### எம்.ஜி.ஆருடன் சிலம்பம்

அதற்குக் காரணம், தேவராஜ் சிலம்பம் ஆடுபவர். வேலூரில் கழக நிகழ்ச்சிக்கு எம்.ஜி.ஆர். வந்தால், அவரை வைத்து ஒரு சிலம்ப நிகழ்ச்சியைக் காலையிலேயே கழகத் தொண்டர்கள் நடத்துவார்கள். அப்போது எம்.ஜி.ஆர். உடன் சிலம்பம் சுற்றுபவராக தேவராஜ் இருந்தார். அதனால் எம்.ஜி.ஆருக்கு நெருக்கம் என்று பேச்சு கிளப்பப்பட்டது. ஆனால், 'நான் கழகத்தின் விசுவாசி, அண்ணாவின் தம்பி, கலைஞரின் அன்பு உடன்பிறப்பு' எனக் கலங்காமல் கழகம் காத்தவர் தேவராஜ். அவரது கழகப் பிடிப்பினைப் போற்றும் வகையில் அவர் எம்.எல்.ஏ. ஆவதற்கு முன்னர், சட்டமேலவை உறுப்பினராக்கிப் பெருமை சேர்த்தார், முத்தமிழறிஞர் கலைஞர்.

> **கொள்கைப் பிடிப்போடு யார் யார் இருக்கிறார்கள் என கழகத்தினர் சோதித்துக் கொள்ளும் காலகட்டமாக அது இருந்தது. அந்த நாட்களிலும் தேவராஜ் கலைஞரின் கரத்தை வலுப்படுத்தியவராக இருந்தார்.**

நெருக்கடி கால மிசா கொடுமையேற்று ஓராண்டு சிறையில் அடைப்பட்டிருந்தார். அவர் மற்றும் அவருடன் அடைக்கப்பட்டு இருந்த கழகத் தோழர்கள் ஐந்து பேர் திடீரென கடலூருக்கு மாற்றப்பட்டனர். கடலூர் சிறையில் கழகத்தின் புரட்சி முழக்கம் கிளம்பியதும் மீண்டும் வேலூருக்கே மாற்றப்பட்டார். விலைவாசி உயர்வுப் போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம் எனக் கழகம் அறிவிக்கும் அத்தனை போராட்டங்களிலும் இந்த வேலூர் சிங்கம் முதல் ஆளாக முன் நின்றதை, இன்றைக்கும் வேலூர் கழக நிர்வாகிகள் கழக உணர்வுடன் நினைவுகூர்கின்றனர்.

### உட்கட்சி குழப்பம்

1993 ஆம் ஆண்டில் மீண்டும் கழகத்தில் உட்கட்சிக் குழப்பம் நீடித்த போதும் தேவராஜ் பெயர் அடிபட்டது. அப்போது யார் பெயர்தான் அடிபடவில்லை? கொள்கைப் பிடிப்போடு யார் யார் இருக்கிறார்கள் என கழகத்தினர் சோதித்துக் கொள்ளும் காலகட்டமாக அது இருந்தது. அந்த நாட்களிலும் தேவராஜ் கலைஞரின் கரத்தை வலுப்படுத்தியவராக இருந்தார்.

கழகத்தின் பல்வேறு படிநிலைகளில் பொறுப்பு வகித்த தேவராஜ் அவர்கள் வேலூர் மாவட்ட அவைத் தலைவராகவும் கழகத்தை வழி நடத்தினார். வயது மூப்பின் காரணமாக 1998 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் 11 ஆம் தேதி இந்த வேலூர் சிங்கம் தனது இறுதி சுவாசத்தை நிறுத்திக் கொண்டது.

### வேலூர் வேங்கை

வேதனை நிரம்ப, அப்போது கலைஞர் ஒரு கடிதம் எழுதினார். "வேலூர் வட்டாரத்துப் பிரச்சினை என்றாலோ, நிகழ்ச்சி என்றாலோ, சாரதியையும், தேவராஜனையும் கேளுங்கள்" என்று அண்ணா அவர்கள் அந்த இருவரையும் தனது தளகர்த்தர்களாக அடையாளம் காட்டிய அந்த நாள் முதல் வி.எம்.தேவராஜை அறிவேன். 'அந்தப் படைமுகத்துப் பெருவீரன்' பங்கேற்காத அறப்போர்க்களம் எதுவுமில்லை. அந்த வேலூர் வேங்கை விடைபெற்றுக் கொண்டதை எண்ணி விழிநீர் பெருக்காதார் அந்த வட்டாரத்தில் யாருமில்லை" என்று அந்த இரங்கல் உரையில், தனது விழி நீரையும் இறக்கி வைத்தார் கலைஞர்.

வேலூர் கோட்டை இன்றைக்கும் கழகக் கோட்டைதான். அரசியல் அறிந்தோர் யாரும் அதை மறுக்க முடியாது. அப்படியான கழகக் கோட்டையின் அடிச் செங்கல்லாக தேவராஜ் போன்றோர் திகழ்ந்ததையும் கழகத்தினர் மறக்க முடியாது.

...துடிக்கும்

## புத்தகக் காட்சியில் அறநிலையத்துறை!



'**தி**ராவிட மாடல்' ஆட்சியில் கோயில் சொத்துகளை மீட்டெடுத்தல், குடமுழுக்கு நடத்துதல், கோயில்களைப் புனரமைத்தல், அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்குதல், அன்னைத் தமிழில் அர்ச்சனை என இந்து சமய அறநிலையத்துறை தினம் தினம் புதுப்புது வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 அரிய பக்தி நூல்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்டு, கடந்த ஆண்டு ஜனவரி 19 ஆம் தேதி முதலமைச்சர் வெளியிட்டார். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் புத்தக விற்பனை நிலையமும் திறக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு சென்னை புத்தகக் காட்சியிலும் இந்து சமய அறநிலையத்துறை தனி அரங்கம் அமைத்து, 'தேவாரம்', 'திருவாசகம்', 'திருப்புகழ்', 'திருப்பாவை', 'திருவெம்பாவை', 'அபிராமி அந்தாதி', 'நாலாயிர திவ்யபிரபந்தம்', 'தமிழகக் கலைகள்', 'சைவமும் தமிழும்', 'இந்தியக் கட்டடக் கலை வரலாறு', 'அவ்வையார் வரலாறு', 'பதினெண் புராணங்கள்', 'சிற்பக் கலை நூல்கள்' உள்ளிட்ட 108 அரிய நூல்களை விற்பனைக்கு வைத்துள்ளது. அரங்கின் வடிவமைப்பும் நூல்களும் புத்தகக் காட்சிக்கு வரும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்திழுக்கின்றன.

## :ப்ளாஷ்பேக்





கோவி.லெனின்

### சந்திப்புக்காக இதழ்!

2004 ஆம் ஆண்டு ஜனவரியில், புத்தாண்டை முன்னிட்டு 'தமிழ் அணு' என்று தலைப்பிட்ட 16 பக்க குறுஇதழை 'துளி தீ போதும் இருள் எரிக்க' என்ற அடைமொழியுடன் வெளியிட்டேன். அந்த முயற்சியைப் பாராட்டி முத்தமிழறிஞர் கலைஞர் 'முரசொலி' உடன்பிறப்புக் கடிதத்தில் என் பெயரையும் குறு இதழையும் குறிப்பிட்டு அரைப் பக்கத்துக்கு எழுதி இருந்தார். நன்றி தெரிவிப்பதற்காக 'முரசொலி' அலுவலகத்தில் தலைவர் கலைஞரைச் சந்தித்தேன். ஏற்கெனவே, 1996 ஆம் ஆண்டு அவருடைய அணிந்துரையுடன் வெளியாகியிருந்தது என் முதல் கவிதை நூல். அதனை நினைவுபடுத்தி அவரிடம் வழங்கினேன். மாதந்தோறும் 'தமிழ் அணு' குறுஇதழ் அச்சானதும் கலைஞரை நேரில் சந்தித்து வழங்குவேன். அவர் அன்புடன் உரையாடுவார். அதற்காகவே, அவ்விதழை நடத்திய நினைவுகள் இன்றைக்கும் மனதை விட்டு அகலாதவை.

**-கோவி.லெனின், தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகள்!

**1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி சேலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கலைஞர், அதிசயிக்கத் தக்க வகையில், ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அப்போது மாவட்டச் செயலாளராக இருந்த வீரபாண்டி ஆறுமுகம், கலைஞரின் அன்றைய சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தார். இறுதியாக செவ்வாப்பேட்டைப் பகுதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றைய நாள் முழுவதும் கொடி ஏற்றும் நிகழ்ச்சிகளில் கிடைத்த, 15 ஆயிரம் ரூபாயை கழக வளர்ச்சி நிதிக்கு வழங்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 351




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131